விலை: 60.00
பக்கங்கள் : 20
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 23
ஒலி 245 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 05 ஞாயிற்றுக்கிழமை (21.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


## போராட்டங்களை நசுக்கி ஆட்சியை முன்கொண்டு செல்ல முடியாது

### ரணிலுக்கு ஜே.வி.பி தலைவர் அநுர எச்சரிக்கை



(கொழும்பு)

போராட்டங்களை நசுக்கி ஆட்சியை முன்கொண்டு செல்ல முடியாது என்று ஜேவிபியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க எச்சரித்துள்ளார்.

நுகேகொடையில் நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பேரணியில் பங்கேற்றபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க 134 பேரால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக ஆட்சி செய்கிறார்.

எனவே அவர், தம்மை தெரிவு 19

## வடமராட்சியில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(கரணவாய்)

வடமராட்சியில் வாகனம் தடம் புரண்டதில் அதில் பயணம்செய்த இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நேற்று சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் புலோலி - கொடிகாமம் வீதியில் உள்ள முள்ளிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் துன்னாலை குடவத்தையைச் சேர்ந்த ஜெயசிங்கம் ஜெயந்தன் (வயது- 27) என்ற இளைஞனே பலியாகியவராவார்.

மணல் கடத்தி வந்த கப் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதாக தெரி 19

## சபுகஸ்கந்தவை இயக்க ஏற்பாடு

அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 40 நாட்களுக்கு முழு கொள்ளளவில் இயங்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக 19

## நாட்டின் சவாலை அச்சமின்றி ஏற்றுக்கொண்ட ஜனாதிபதிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்



### மகா சங்கத்தினர் வலியுறுத்து

(கொழும்பு)

பொறுப்புக்களில் இருந்து அனைவரும் விலகிய வேளை நாட்டைப்பற்றி சிந்தித்து அதன் பாரிய பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணிலுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என மகா சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லை பற்றைக்குள் முதியவரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

வல்லை பற்றைக்குள் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் நேற்று நண்பகல் மீட்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்க 19

## இனப் படுகொலையாளிகளை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துக

### உறவுகள் ஜெனிவாவுக்கு மகஜர் சமர்ப்பிக்க முடிவு

(வவுனியா)

எம்மை இனப்படுகொலைக் குள்ளாக்கிய கோட்டாபயவையும் அதனுடன் சம்பந்தப்பட்ட அரசில் உள்ளவர்களையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனையை பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையை மட்டும் முன்வைத்து மகஜர் ஒன்றை ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் கட்சித்தலை 19

## பாராளுமன்றைக் கலைத்து புதிய ஆணைக்கு இடமளியுங்கள்

### தேசிய மக்கள் சக்தி அடையாள நடைபவனி

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய ஆணைக்கு இடமளிக்குமாறு கோசங்களை முன்வைத்து தேசிய மக்கள் சக்தியினர் நேற்று அடையாள நடைபவனி ஒன்றை மேற்கொண்டனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தை சூழவுள்ள பகுதியில் இருந்து ஆரம்பமான பேரணி நுகேகொடையை சென்றடைந்தது.

பின்னர் நுகேகொட ஆனந்த சமரகோன் 19

## ராஜபக்ஷவை விட ரணில் சர்வாதிகாரி

### ஹிருணிகா பிரேமச்சந்திர



(கொழும்பு)

ராஜபக்ஷவை விட ரணில் சர்வாதிகாரி என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

ஹிருணிகா பிரேமச்சந்திர நேற்று காலை 11.00 மணியளவில் குற்றப் புலனாய்வு திணைக் 19

## ரணில் வீடு எரிப்பு

### சஜித்தின் சகோதரியிடம் விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு எரியூட்டப்பட்ட சம்பவம் தொடர்பான சஜித் பிரேமதாஸவின் சகோதரியிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது. 19

## பயங்கரவாத சட்டத்தில் கைது

## சிங்கள மக்களை சிந்திக்க வைத்துள்ளது

### சிறீதரன் எம். பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டம் மதிக்கப்பட வேண்டும். ஆனால், ஒரு ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபடும் ஒருவரைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக கைது செய்திருப்பது சிங்கள மக்களை இன்று சிந்திக்க வைத்துள்ளது. உணர வைத்துள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எனது அன்பு நண்பனும் நல்லூர் பிரதேச
சபையின் தவிசாளருமாகிய **மயூரன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்

## கனகசபை பத்மநாதன்

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியை
கேட்டு மிகவும் வேதனை அடைவதுடன்
அன்னாரின்குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த
அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்கின்றேன்.



பிரிவால் துயருறும்
**இணுவையூர் வி.கே. குகானந்தன்**
**உறுப்பினர் நல்லூர் பிரதேச சபை**


பிறப்பு 18.01.1947 இறப்பு 20.08.2022

(12513)

# கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினதும்
விளையாட்டு கழகத்தினுடைய
ஆயுட்கால உறுப்பினர் திரு.**ப.மயூரன்**
(தவிசாளர் நல்லூர் பிரதேச சபை)
அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் கனகசபை பத்மநாதன்



அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயர்
அடைவதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயருடன்:-
**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும்**
**விளையாட்டுக் கழகமும்**

(C-4768)

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணர் மாணிக்கவாசகர்



மாவிட்டபுரத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆன்மீக தொண்டன், சமூக செயற்பாட்டாளர் கிருஷ்ணர் மாணிக்கவாசகர் அவர்கள் கடந்த 19.08.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்றைய தினமே கோம்பயன்மணல் மண்டபத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டை ஒழுங்கை,
கொக்குவில்.

(C-4764)

தகவல்: கி.ஆறுமுகம் சகோதரன்
தொ.பே: 074 194 2027


Government TVEC Approved

# தாதியர் பயிற்சிப் பாடசாலை
# FLORENCE NIGHHTINGAL

## தாதியப் பயிற்சி நெறி - 2022

**நுழைவுத் தகைமை**

- ☑ க.பொ.த சாதாரண தரத்தில் குறைந்தது 5 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல்.
- ☑ விண்ணப்பதாரி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்.
- ☑ பயிற்சிக்கால எல்லை 1 வருடம் (பகுதிநேரம்)
- ☑ பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
- ☑ தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்.



**கற்கை நிலையங்கள்**

⊙ மருதனார்மடம் ⊙ நெல்லியடி ⊙ சாவகச்சேரி

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்
VIBER 077 718 6438 | WhatsApp 077 4824473 | T.P NO 077 7186438

நிர்வாகம், புளோரன்ஸ் நைற்றிங்கேல்
தாதியர் பயிற்சிப் பாடசாலை.

(12507)


# மரண அறிவித்தல்

## கதிரவேலு கந்தசாமி

### (ஓய்வுநிலை தபால் அதிபர்)



பிறப்பு 1937.07.08 இறப்பு 2022.08.13

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு கந்தசாமி கனடா Torantoவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - வள்ளியம்மை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் யோகேஸ்வரியின் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்) அன்புக் கணவரும் சுபத்திரா (ஆசிரியை - யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் ,கல்லூரி), சுதர்சனன் (கனடா), ஜெயகௌரி (கனடா), ஜெயரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயானந்தகுமார் (ஓய்வுநிலை அதிபர்), ரவீந்திரன் (கனடா), சஜித்தா (கனடா), வசந்தகுமாரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் செல்வேந்திரன் (லண்டன்), யோகேஸ்வரன் (லண்டன்), இராஜேஸ்வரன் (இலங்கை), புஸ்பராசா (டென்மார்க்), இராசமலர் (கனடா), செல்வச்சந்திரன் (லண்டன்), கருணாகரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் உஷானி, அங்குசன், புருசோத், ராமன், றொசான், றுஸ்னி, ரிஷி, ஜெனா, ஜெலக்ஷா, ஜெனுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெசிக்கா (லண்டன்), கனகேஸ்வரி (லண்டன்), சிவராஜினி (இலங்கை), ஜெயந்தி (டென்மார்க்), பாமதி (லண்டன்), பிரேமிளா (டென்மார்க்), தவராஜா (கனடா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20.08.2022 சனிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈமக்கிரியைகள் 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 12.30 - 3.30 மணிவரை (கனடா நேரம்) Ajax Crematorium and Visitation Centre, 38A, Finley Ave, Ajax LIS2E3இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
K.யோகேஸ்வரி 416 439 4409 (கனடா)
J.சுபத்திரா 94 711 32 5891 (இலங்கை)
K.சுதன் 7782317058 (கனடா)
K.ரூபன் 416 471 4716 (கனடா)
R.ஜெயகௌரி 417 077 64819 (கனடா)

தகவல்: மருமகன்
சு.ஜெயானந்தகுமார்
021 226 3133
077 717 8161
070 717 8161

(C-4765)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 22.07.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## ஐயாமுத்து சிவராசா

(ஓய்வுபெற்ற கணித ஆசிரியரும்
கருணாலய ஆண்கள் இல்ல முகாமையாளரும்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து எங்கள் துயரத்தில் பங்குகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் தொலைபேசி மூலமாகவும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் ஆறுதல் தெரிவித்த அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"ஸ்ரீ ரஞ்சனி வாசம்"
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

(12506)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றுமொரு நிபந்தனை விதித்தது சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

**சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களை வழங்குவதற்கு, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடன் வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் தேவை என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.**

இலங்கையின் கடன் நிலை யற்றதென மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் நீண்ட கால நிதி வசதிகளுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் அனுமதிக்கு, கடன் நிலைத்தன்மை மீளமைக்கப்படும் என இலங்கையின் கடன் வழங்குநர்களிடமிருந்து போதுமான உத்தரவாதம் தேவை என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகளுடன் பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து விவாதிக்க சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் எதிர்வரும் 24-31 ஆம் திகதிக்கு இடையில் நாட்டிற்கு வருகை தர உள்ளனர்.

இந்த விஜயத்தின் போது சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மற்ற பங்குதாரர்களுடன் தொடர்ந்து பணியாற்றுவார்கள் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறி விலைகள் வீழ்ச்சி

(தம்புள்ள)

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை பெருமளவு குறைந்துள்ளதாக விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, பொருளாதார மையத்தில் மரக்கறிகளின் விலை குறைந்துள்ள போதிலும், நாடளாவிய ரீதியில் உள்ள ஏனைய சந்தைககளில் மொத்த மற்றும் சில்லறை மரக்கறி விலைகள் அதிகரித்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் 550 முதல் 600 ரூபா வரை அதிக விலைக்கு விற்கப்பட்ட போஞ்சி 220-300 ரூபாவுக்கும் வெண்டைக்காய் 100 ரூபாவுக்கும் விற்கப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கறி மிளகாய், கத்தரிக்காய் தவிர அனைத்துக் காய்கறிகளும் தற்போதைய விலையை விட 50% குறைவாக விற்கப்படுவதாகவும் காய்கறிகளை மிகக்குறைந்த விலையில் விற்க நாள் முழுவதும் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (நி)

# சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்காவிட்டால் பொதுத்தேர்தலை உடன் நடத்துங்கள்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

(கொழும்பு)

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ள பின்னணியில் அரசியல்வாதிகள் அமைச்சு பதவிகளுக்காக போட்டிபோட்டுக் கொண்டிருக்கிறார்கள் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அபயராம விகாரையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை பொதுத் தேர்தலை நடத்தினால் நாட்டு மக்கள் பெரும்பாலான அரசியல்வாதிகளுக்கு தக்க பாடத்தை புகட்டுவார்கள் என்பதோடு சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்காவிடின் பொதுத்தேர்தலை நடத்துங்கள் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பெரும்பாலான நாடுகள் பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்ட போது அந்நாட்டு அரசியல்வாதிகள் அரசியல் கட்சி பேதங்களை துறந்து பொது கொள்கையின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட்டு, நாட்டை கட்டியெழுப்பியுள்ளார்கள் எனவும் குறிப்பிட்டார்.



இதேவேளை தாய்லாந்து, தென்கொரியா ஆகிய நாடுகள் பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்ட போது அந்நாட்டு மக்கள் தமது சொத்துக்களையும் தங்கத்தையும் அரசாங்கத்திற்கு வழங்கி பொருளாதார நெருக்கடியினை வெற்றி கொண்டார்கள்.

அந்த நாட்டு அரசாங்கங்கள் அந்நாட்டு மக்களை ஒருபோதும் நெருக்கடிக்குள்ளாக்கவில்லை என குறிப்பிட்ட அவர் யார் ஜனாதிபதி, யார் பிரதமர், யாருக்கு எந்த அமைச்சு என்பதற்கு மாத்திரம் அவதானம் செலுத்தப்படுகிறது என குற்றம் சாட்டியுள்ளார். (நி)

# அமைதியை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் முப்படைகள்

## விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல மாவட்டங்களிலும் பொது மக்களின் அமைதியைப் பேணுவதற்காக பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் முப்படையினரை பணிக்கு அழைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ள குறித்த வர்த்தமானி அறிவித்தல் நாளை திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ள குறித்த வர்த்தமானி அறிவித்தலில், "பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களையும் அனைத்து மாவட்டங்களிலும் பொது மக்களின் அமைதியைப் பேணுவதற்காக இம்மாதம் 22 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றேன்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, குருநாகல், புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் இவ்வாறு முப்படையினர் பாதுகாப்பு கடமைக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இலாபம் ஈட்டிவரும் நிறுவனங்களை தனியார் மயப்படுத்த எதிர்ப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் தனியார் மயப்படுத்தும் நிறுவனங்களின் பட்டியலில் பாரியளவில் இலாபம் கிடைத்துவரும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் ஆகிய நிறுவனங்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

இலாபம் ஈட்டிவரும் நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அரச நிறுவனங்கள் சிலவற்றை தனியார் மயப்படுத்த அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நட்டத்தில் செயற்படும் அரச நிறுவனங்கள் சிலவற்றை தனியார் மயப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதுதொடர்பான பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

பாரியளவில் தொ[illegible]த்தில் இயங்கிவரும் நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கப்போவதில்லை. அவ்வாறான நிறுவனங்களை தொடர்ந்து செயற்படுத்துவதன்மூலம் நாட்டுக்கு சுமையாகவே இருக்கும்.

ஆனால் தனியார் மயப்படுத்த இருக்கும் நிறுவனங்களின் பட்டியலில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் ஆகியனவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்த இரண்டு நிறுவனங்களும் பாரியளவில் இலாபமீட்டும் நிறுவனங்களாகும். அதனால் இலாபமீட்டும் நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு. இது தொடர்பில் பாராளுமன்றத்தில் எமது நிலைப்பாட்டை தெரிவிப்போம்.



அத்துடன் பாரியளவில் நட்டத்தில் இயங்கும் ஸ்ரீ லங்கன் எயார்லைன் போன்ற நிறுவனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது குறித்து எமக்கு எந்த எதிர்ப்பும் இல்லை. இவ்வாறான நிறுவனங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ள முடியும்.

அத்துடன் நட்டமடையும் நிறுவனம் என்றாலும் அதனை தனியார் மயப்படுத்துவதாக இருந்தால் அதில் பணிபுரியும் ஊழியர்களின் நிலை என்ன என்பது தொடர்பிலும் அவர்களுக்கு நட்டஈடு வழங்குவது போன்ற விடயங்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். அதேபோன்று மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வெளிப்படையாக இருக்க வேண்டும்.

மேலும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனம் ஆகியன தனியார் மயப்படுத்த முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 07 – 11 – 1949



இறப்பு 20 – 08 – 2022

## திரு. நடராஜா நவரட்ணராஜா

(இளைப்பாறிய ஆசிரியர் – யா/ கொக்குவில் இராமகிருஷ்ண ம.வி)

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. நடராஜா நவரட்ணராஜா அவர்கள் நேற்று (20.08.2022) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் ஜீவரட்ணராஜா, ஜெயரட்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் சுவர்ணலதா, காண்டீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசுந்தரி, சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேதீஸ்வரன், மேரியன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜீவா, கோபால், கஸ்தூரி ஆகியோரின் பெரியதந்தையும் அருள்சாயி, ஷாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-4770)

தகவல் :-
குடும்பத்தினர்

# அகில இந்திய கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கு தடை விதிப்பு

அகில இந்திய கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கு 2022 ஓகஸ்ட் 14 ஆம் திகதியிலிருந்து அமுலு க்கு வரும் வகையில் இடைக்காலத் தடை விதித்துள்ளதாக சர்வதேச கால்பந்தாட்ட சங்கங்களின் சம்மேளனம் (FIFA) அறிவித்துள்ளது.

இது தொடர்பாக FIFA வின் உறுப்பு நாடுகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

FIFA வின் சட்டங்களை கடுமையாக மீறும் வகை யில் மூன்றாம் தரப்பினரின் அநாவசிய செல்வாக்கின் காரணமாக அகில இந்திய கால்பந்தாட்ட சம்மேளனத்தை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்த FIFA பொதுச்சபை பணியகம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

அகில இந்திய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவின் அதிகாரங்களைத் தொடர்வதற்கு ஏதுவாக நிர்வாகக் குழு அமைக்கப்பட்டவுடன் மற்றும் அகில இந்திய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அன்றாட விடயங்களில் அகில இந்திய கால்பந்தாட்ட சம்மேளனம் முழுமையான கட்டுப்பாட்டை பெற்றவுடன் இடைக்காலத் தடைநீக்கப்படும் என FIFA தெரிவித்துள்ளது. (4)

# ஆயிரம் நாட்களாகியும் சதமடிக்காத விராட்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனாக இருந்தவர் விராட் கோலி. தலைசிறந்த கிரிக்கெட் வீரர் களில் இவரும் ஒருவர். சர்வதேச கிரிக்கெட்டில் சதங்களையும் சாதனைகளையும் குவித்து வந்தார்.

விராட் கோலி சர்வதேச கிரிக்கெட்டில் இதுவரை 70 சதங்களை குவித்துள்ளார். கடைசியாக 2019, நவம்பர் 23 இல் விராட் கோலி சதம டித்தார். நேற்று முன்தினம் 19 ஆம் திகதியுடன் அவர் சதமடித்து 1,000 நாட்கள் நிறைவடைந்துவிட்டன.

கடைசி சதத்திற்கு பிறகு அவர் 24 அரை சதங்கள் அடித்துள்ளார். அதிகபட்சமாக இந்த ஆண்டுகளில் அவர் 94 (ஆட்டமிழக் காமல்) அடித்துள்ளார்.

இந்நிலையில் விராட் கோலி கடந்த 3 ஆண்டாக சதங்கள் அடிக்க முடியாமல் திணறிவருகிறார்.


ஆயிரம் நாட்களாக கோலி ஒரு சதம் கூட அடிக்காதது குறித்து சமூக வலைத்தளங்களில் அவரது இரசிகர்கள் சோகத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். விராட் கோலியின் அடுத்த சதத்தை எதிர்பார்த்து அவரது இரசிகர்கள் காத்திருக்கின்றனர். (4)

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச சபையின்
கௌரவ தவிசாளர் **மயூரன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்

## கனகசபை பத்மநாதன்



மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப்பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

பிரிவால் துயருறும்

**உறுப்பினர்கள்**
**நல்லூர் பிரதேச சபை**

(C-4769)

தோற்றம் 18.01.1947

மறைவு 20.08.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப்புகை பிரயோகத்தை நிறுத்துமாறு

# சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அழுத்தம்

(ஜெனிவா)

**இலங்கையில் போராட்டங்களை ஒடுக்க பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தும் கண்ணீர்ப்புகை பிரயோகத்தை நிறுத்துமாறு இலங்கைக்கு சர்வதேச ரீதியில் அறிவிக்கப்பட்டுள்ளது.**



அதன்படி, சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையினால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வரும் போராட்டங்களை ஒடுக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட கண்ணீர்ப்புகை குண்டுகளில் கண்களுக்கு தீங்கு விளைவிக்கும் நச்சு இரசாயனம் உள்ளதாக சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த நாட்டில் பொலிஸாருக்கு கண்ணீர்ப்புகை விற்பனை மேற்கத்தேய நாடுகளினால் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவந்துள்ளது.இந்த நாட்டில் நடக்கும் போராட்டங்களை ஒடுக்குவதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறைந்த பட்ச சக்தி என்று கூறி போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தும் வகையில் பொலிஸார் செயற்படுகின்றனர்.

பல போராட்டக்காரர்கள் கண்ணீர்ப்புகைக் குண்டு வீசி மயக்க மடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இவ்வாறானதொரு நிலையிலேயே இந்த நாட்டில் கண்ணீர்ப் புகை பிரயோகத்தை தடை செய்யு மாறு சர்வதேச சமூகம் அறிவித்தல் விடுத்துள்ளது. (நி)

# ஒவ்வொரு தனி நபரும் 1 மில்லியன் கடனாளி

## மத்திய வங்கி வெளியிட்ட தகவல்

(கொழும்பு)

இலங்கையின் தனிநபர் கடன் தொகை தொடர்பான அறிக்கையை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

இந்த வகையில் தனிநபர் கடன் தொகையானது தற்போது ஒரு மில்லியன் ரூபாவை கடந்துள்ளதாக தெரிவிக்கின்றது.

தற்பொழுது இலங்கையின் உள்நாட்டுக் கடனாக சுமார் 12,442.3 பில்லியன்களும், வெளிநாட்டுக்கடனாக 10,867.8 பில்லியன்களும் செலுத்த வேண்டியிருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள் ளது.

மேலும், இந்த வருடம் ஏப்ரல் மாதம் அரசு செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையானது 4 மாதங்களுக்குள் 32 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வகையில் தனி நபரின் கடனானது தற்போது 10 இலட்சமாக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# மரண அறிவித்தல்

## அமரர்.வேலாயுதம் இராஜநாயகம்

(ஓய்வுநிலை பொது சுகாதார பரிசோதகர்)



பிறப்பு-30.03.1947 இறப்பு-14.08.2022

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு.வேலாயுதம் இராஜநாயகம் அவர்கள் கடந்த (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்- வேலாயுதம் மற்றும் வேலாயுதம் இராணி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளப்பு-பார்பரம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், பிரான்சிஸ்காவின் அன்புக் கணவரும், பிராங்கிளினின் பாசமிகு தந்தையும், அஜீனாவின் அன்பு மாமனாரும், றியானாவின் பாட்டனாரும்,அரியநாயகம் (Marine Engineer) காலஞ்சென்றவர்களான செல்வநாயகம்(பாக்கிஸ்தான்), குணநாயகம் (யாழ்ப்பாணம்), பிரான்சில் வசிப்பவர்களான பிரேமச்சந்திரன், உதயகுமார், கமலாதேவி,சுசீலாதேவி, நாகேஸ்வரி, சுலோசனாதேவி (கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,பரிமளம் (யாழ்ப்பாணம்), மேசிபுளோரிடா (பிரான்ஸ்), காலஞ்சென்ற ருக்மணி (வைத்தியர்), காலஞ்சென்றவர்களான பாக்கியராசா ,குணசேகரம் மற்றும் சந்திரசேகரம் (பிரான்ஸ்), சிவராசா (கொலண்ட்) ஆகியோரின் மைத்துனரும், யூயினி(லண்டன்) அவர்களின் சித்தாப்பாவும், பிரான்சில் வசிப்பவர்களான ஆனோல்ட், றொனால்ட், விதுசன்,சோபி,அர்ச்சனா ஆகியோரின் பெரியப்பாவும், சசிகலா, சசிகரன்,சசிதரன், தணிகைக்குமரன், கஜன், பிரதீப்,தினேஷ், பிரசாந், பிரதாப், பிரியங்கா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க நிகழ்வு இன்று 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அல்லாரை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இறுதிச் சடங்கு வழிபாட்டுடன் அல்லாரை சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(12504)

வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்.

தகவல்: குடும்பத்தினர்.


# இராசிபலன்

21.08.2022
ஆவணி 05, ஞாயிற்றுக்கிழமை
தசமி பின்னிரவு 5.46 மணிவரை

ரோகிணி காலை 8.04 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

ஆவணி ஞாயிறு
சந்திராஷ்டமம் - விசாகம்

**வளவன்**




சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்




உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




எடுத்த காரியத்தை முடிக்க ஒருமுறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள்.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு




பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்தடைவர், செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வேலைச் சுமை கூடும், பிரயாண பயமுண்டு.




வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும் நாள், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.




பிள்ளைகளின் நீண்ட நாளைய விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.




வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சுப தகவல்கள் இல்லம் வந்துசேரலாம். மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.




பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னோடு பேசும் ஒவ்வொருவரும் ஒரு ஞானி என்று நினை.

# அமைச்சர் பந்துல நேற்று யாழ். விஜயம்



(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு யாழ்.மாவட்டத்திற்கு நேற்று சனிக்கிழமை வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலைய அதிபர் ரி.பிரதீபனைச் சந்தித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன காங்கேசன் துறை - கொழும்பு புகையிரத சேவையை மேம்படுத்துவது மற்றும் சேவைகளை அதிகரிப்பது தொடர்பில் கலந்துரையாடினார். அத்துடன் இரவு தபால் சேவையின் மீள் ஆரம்பம் தொடர்பிலும் அறிவியல் நகர், சாவகச்சேரி நிலையங்களில் உத்தரதேவி ரயில் சேவை தரித்து நிற்கும் என மேற்படி சந்திப்பில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். (4-18-33-104)

# சிவில் சமூக தரப்பினருடன் ஐ.நா. அதிகாரிகள் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் (UNDCO) ஆசிய-பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் டேவிட் மெக்லாகலன்-கார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிவில் சமூக தரப்பினரை யாழ்ப்பாணம் யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அரசியல் கைதிகளுக்கான குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரும் உடனிருந்தார்.

இந்த சந்திப்பில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் லீலாவதி ஆனந்தநடராஜா, எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பாதிக்கப்பட்ட தரப்புகள் நீதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் அரசியல்கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகள் பற்றியும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. (4-33)



சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் நலன்புரிச் சங்கத்தின் ஸ்தாபகருமான மாமனிதர் சி.சிவமகாராசாவின் 16 ஆவது ஆண்டு நினைவேந்தல் தின நிகழ்வு நேற்று சனிக்கிழமை தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ந.உமாகரன் தலைமையில் நடைபெற்றது. (படம்-ரவிசாந்)

### சான்றுப் பொருட்களை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடுநர் தரப்பினரால் பாரப்படுத்தப்பட்ட சான்றுப் பொருட்களான துவிச்சக்கரவண்டிகள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே, குறித்த சான்றுப் பொருட்களினை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2022.10.25 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமூகமளித்து உரிமைக் கோரிக்கையை நிலை நாட்டும்படி மருத்துவமனை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# மட்டுவிலில் 78 பயனாளிகளுக்கு கால்நடைகள் வழங்கி வைப்பு



(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் சந்திரபுரம் தேங்காய் எண்ணெய் உற்பத்திக் கிராமத்தின் பயனாளிகளுக்கு கடந்த புதன் கிழமை கால்நடைகள் வழங்கி வைக்கப்பட்டன.

சௌபாக்கியா திட்டத்தின் கீழ் 13 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் நிறுவப்பட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்திக் கிராம திறப்பு விழா வைபவத்தின் ஓர் அங்கமாக உற்பத்திக் கிராம பயனாளிகள் 78 பேருக்கு வாழ்வாதார மேம்பாட்டிற்காக கால்நடைகள் வழங்கி வைக்கப்பட்டன. (4-30)

# மரண அறிவித்தல்



அமரர்.திரு. பொன்னுச்சாமி பழனிவேல் முருகதாஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவின் மெல்பனை வதிவிடமாகவும் கொண்டிருந்த பிரபல தவில் வித்துவான் லயின் ஞானபாரதி, தமிழ் இசைச் செல்வன், தவில் இசை சுடரொளி ஆகிய பட்டங்களைப் பெற்ற பொன்னுச்சாமி பழனிவேல் முருகதாஸ் அவர்கள் 18.08.2022 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தவில் வித்துவான் யாழ்ப்பாணம் சின்ன பழனிவேல் தையளம்பாள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவில் வித்துவான் அளவெட்டி கணேஷன் என்கிற கணேஷரட்னம் - ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரவதனி அவர்களின் அன்புக் கணவரும் ஆவார். கார்த்தீபன், கனித்திரா, விதிர்லா, கஜேஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 21.08.2022 இன்று ஞாயிற்றுக்கிழமை இல.790, Frangston Dangdidon Road, Belarong Memorial Park இல் பார்வைக் காக வைக்கப்பட்டு அதே இடத்தில் இறுதிக் கிரியைகள் 22.08.2022 திங்கட்கிழமை காலை 10.30 மணி முதல் 1.30 மணிவரை இடம்பெறும். இவ்வறிவித்திலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு

கார்த்திக் +61484572260 வதனி +61423352466 கேசவன் +61428829845

# யாழ்.மாவட்டச் செயலகத்தில் தொழிற்சந்தை நிகழ்வு



(குப்பிழான்)

யாழ்.மாவட்டச் செயலகமும் மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களமும் இணைந்து நடத்திய மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

தொழில் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வேலை தேடுவோருக்கான தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக பத்து தொழில் வழங்குநர்கள் நூற்று ஐம்பது தொழில் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் வகையில் மேற்படி தொழிற்சந்தை நிகழ்வு நடைபெற்றது. (4-18)

கரவெட்டி ஒன்றிணைந்த இளைஞர் அமைப்பினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கரவெட்டி தாழங்குழி முருகன் கோவில் பகுதி மற்றும் முன்னுள்ள வைரவெல்லன் குளப்பகுதி தூய்மையாக்கும் பணி நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 357
Viber 076 636 3378



# இந்தியாவைத் தவிர்த்து சீனாவுடன் ஒட்டுகிறதா இலங்கை!

இந்தியாவின் எதிர்ப்பையும் தாண்டி அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு தனது பணியைத் தொடங்கியது சீனாவின் உளவுக் கப்பல் யுவான் வாங் 5.

தெற்காசியாவின் அதிகாரப் போட்டியில் இந்தியாவும் சீனாவும் முட்டி மோதிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் குறித்த கப்பலை இலங்கை பரப்புக்குள் நுழைய விட்டதால் இந்தியா இலங்கை மீது அதிருப்தி கொண்டிருப்பதை உணர முடிகின்றது.

இலங்கை இந்தியாவின் உற்ற தோழன் என இலங்கை ஆட்சியாளர்கள் கூறினாலும் சீனாவை தோழனிலும் நெருக்கமாக வைத்திருப்பதில் தீவிரம் காட்டி வருகின்றார்கள்.

குறித்த உளவுக்கப்பலை இலங்கைப் பரப்பிற்குள் அனுமதிக்க வேண்டாம் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என இந்தியாவினால் இலங்கைக்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் குறித்த கப்பல் இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்து விட்டதை இந்தியா எக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்றது என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

யுவான் வாங் 5 கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்ததும் அதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் பாரிய வரவேற்ப்பை மேற்கொண்டிருந்தார்கள் என்பது சீனாவின் வருகையை இலங்கை ஆட்சியாளர்கள் விரும்புகின்றார்கள் என்பதற்கான நல்ல உதாரணம்.

இக் கப்பல் வரவேற்பில் வரவேற்பு உரையை ஆற்றிய விமல் வீரவன்ச இலங்கையில் ஆட்சிக் கவிழ்ப்பை சீனா மேற்கொள்ள வில்லை எனப் பேசியிருந்தார்.

> "இந்தியாவின் நலனுக்காக இலங்கையின் கொள்கைகையை மாற்ற முடியாது என யுவான் வாங் 5 சீனக் கப்பல் வரவேற்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பேசிய பேச்சு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது"

அதாவது தொண்டு நிறுவனங்களை நிறுவி அதனூடாக அவர்களுக்கு நிதியுதவி வழங்கி இலங்கையின் ஆட்சிக் கவிழ்ப்பை ஒரு போதும் சீன அரசு மேற்கொள்ளவில்லை எனவும் சீனா இலங்கையின் உற்ற நண்பன் என்றும் கூறியிருந்தார்.

அவர் இவ்வாறு கூறியதற்குள் வேறு ஒரு அர்த்தம் ஒழிந்துள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாகப்பட்டது இலங்கையில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பிற்கு வெளிநாடுகளின் ஒத்துழைப்பு இருந்தது என்பதாகும்.

அவ்வாறெனின் குறித்த ஆட்சிக் கவிழ்ப்பிற்கு இந்தியா உதவியதா என்ற எண்ணம் தோன்றுவதை தவிர்த்து விட முடியாது.

குறித்த சந்தேகத்தை வலுப்பெறச் செய்வதாய் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர அந் நிகழ்வில் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இந்தியாவின் தேவைக்காக இலங்கையின் வெளிவிவகார கொள்கைகளை மாற்றியமைக்க முடியாது என்பதே அவரின் கூற்று.

குறித்த கப்பல் வரவேற்பின் போது யுவான் வாங் 5 கப்பலின் கப்டன் சரத்



வீரசேகரவுக்கு கைலாகு கொடுப்பதை தவிர்த்திருந்த செய்திகள் ஊடகங்களில் வெளியாயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விமல் வீரவன்ச, சரத்வீரசேகர ஆகியோரின் கருத்துக்களை ஒப்பு நோக்கும் போது இந்தியாவை குறை கூறுவதாய் அமைந்துள்ளதை உணர முடிகிறது.

எது எவ்வாறோ மிகப் பலம் வாய்ந்த சீனாவின் உளவுக் கப்பல் இலங்கை எல்லைக்குள் தரித்து நிற்பது இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பது உண்மை.

இக்கட்டான கால கட்டத்தில் இந்தியா தார்மீக ரீதியிலான உதவிகளை வழங்கியமையை இலங்கை அரசு மறந்துவிடக் கூடாது என இந்தியா தெரிவித்திருந்ததும் குறித்த கப்பல் வருகையைத் தொடர்ந்து தனது பாதுகாப்பை பலப்படுத்தியதையும் வைத்துப் பார்க்கும் போது இந்தியா எதற்கும் தயார் என்பதை எடுத்தியம்பியிருக்கிறது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு சீனக் கடனே காரணம் என பொருளாதா வல்லுநர்கள் கூறியிருக்கும் இந் நிலையில் இந்தியாவிடம் இன்னோரென்ன உதவிகளைப் பெற்றுவிட்டு சீனக் கப்பலுக்கு இலங்கைக் கடற்பரப்புக்கள் அனுமதி வழங்கியதை இந்தியா பாரதூரமான விடயமாகவே கொள்ளும்.

இது இலங்கையின் பொருளாதார நெருக்கடியை மேலும் வலுப் பெறச் செய்யும்.

-அபிமன்யு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடிமாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் மௌனம் நிலவியது. மௌனத்தை கலைக்க, பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:-**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பீடமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்த மிகப்பெரும் கொடை.

அதிலும் சைவப் பெருவள்ளல் .சேர் பொன்.இராமநாதன் அவர்களின் பெயரால் நுண்கலைப்பீடம் அமைந்திருப்பது எமது பல்கலைக்கழகத்திற்கு மகுடம் சூட்டுவது போன்றது.

இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை இராமநாதன் நுண்கலைப் பீடமாக உயர்த்துவதில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு உறுப்பினருமான பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களின் பெருமுயற்சி உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டும்.

இதற்கு மேலாக, யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா உட்பட இராமநாதன் நுண்கலைப்பீடம் உருவாகப் பாடுபட்ட அனைவருக்கும் ஆலடியில் நன்றி கூறிக்கொள்ள வேண்டும் என்று சொல்ல, அனைவரும் எழுந்து நின்று நன்றி தெரிவித்து அமர்ந்தனர்.

**விதானையார்-**

இப்படித்தான் எங்கட இருப்புக்களை நாங்கள் பாதுகாக்க வேணும்.

அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகம் மனம் வைத்தால், எங்கட தமிழ் மண்ணில எவ்வளவோ சாதிக்க முடியும்.ஆனால்...

**சாத்திரியார்-**

என்ன விதானையார் ஏதோ சொல்ல வந்ததை சொல்லாமல் தவிர்ப்பது போலத் தெரியுது.

**விதானையார்:-**

இப்ப யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில தடக்கி விழுந்தாலும் ஒரு பேராசிரியரில் தான் தடக்கி விழுகிற நிலைமை இருக்கு. அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில பேராசிரியர் பதவி குவிந்து கிடக்குது.

ஒரு நாட்டில -சமூகத்தில பேராசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்க... அதிகரிக்க அந்த நாடும் மக்கள் சமூகமும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை எட்ட வேணும்.

ஆனால் எங்கட தமிழ் மண்ணில அந்த மாற்றம் ஏற்படாமை வேதனைக் குரியது தான்.

**வாத்தியார்-**

பேராசிரியர்மாருக்குள்ள பீடாதிபதி, துறைத்தலைவர் என்ற பதவிகளுக்கான போட்டியிலேயே காலம் கடந்து போகுது.

நிலைமை இப்படி இருக்கும் போது சமூகத்தைப் பற்றி சிந்திக்கிறதுக்கு எங்க நேரம்.

**கங்காணி:-**

அது மட்டுமல்ல வாத்தியார்.ஒரு துறையில இருக்கக்கூடிய பேராசிரியர்களுக்குள்ள போட்டி இருந்தா பிறகென்ன. அவருக்கு எதிராக இவரும் இவருக்கெதிராக அவரும் மாறி மாறி அறிக்கை விடுவினம். அதிலேயே காலம் கடந்து போகும்.

**மூப்பர்:-**

ஏதோ எங்கட தமிழ் மக்களின்ர ஊழ்வினைப் பயன் போலும். எங்களுக்குள்ளே முட்டி மோதி விமர்சித்துக் கொண்டு எல்லாத்தையும் போட்டுடைக்கிறம்.

இனியாவது எங்கட இனம், எங்கட மொழி என்று நினைத்து சமூகப் பணி செய்ய வேண்டும்.

**சாத்திரியார்:-**

என்னைப் பொறுத்தவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எல்லா விடயத்திலும் தலையிடாவிட்டாலும் இப்ப வடபுலத்தில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகிற போதை வஸ்து பாவனையை தடுக்கிறதிலாவது எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் ஈடுபட வேணும்.

குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக சமூகவியல் துறை மற்றும் இதர பிரிவுகளும் சேர்ந்து ஒரு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியம்.

கடந்த சில நாட்களுக்குள்ள மட்டும் போதை வஸ்து பாவனை உச்சமடைந்து ஏழு பேர் உயிரிழந்திருக்கினம்.

இதைவிட இளம் பிள்ளைகள் போதைப் பாவனைக்கு ஆளாகியிருப்பது மிகப் பெரிய கொடுமை.

இது பற்றி நாங்கள் கரிசனை கொள்ளாவிட்டால், உயிரிழப்புகளையும் சமூக துஸ்பிரயோகங்களையும் நாங்கள் சந்திக்க வேண்டிவரும்.

எனவே போதை வஸ்து ஒழிப்புத் தொடர்பில மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேணும் என்றொரு தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம்.

இவ்வாறு சாத்திரியார் கூறியதும் குறித்த தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

**சிறாப்பர்:-**

அது சரி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீளவும் இலங்கைக்கு வருவார் என்று சொல்லுகினம் உண்மை தானோ.

**கங்காணி:-**

அப்ப இன்னொரு பெரிய ஆர்ப்பாட்டத்திற்கு இடம் இருக்குதென்று சொல்லுறியள்.

**விதானையார்:-**

இல்லை. கோட்டா திரும்பவும் இலங்கைக்கு வந்தாலும் அது தொடர்பில ஆர்ப்பாட்டங்கள் பெரிசா நடக்காதென்று தான் நான் நினைக்கிறன்.

**கங்காணி:-**

ஏன் விதானையார் அப்படிச் சொல்லுறியள்.

கோட்டாவால தானே இலங்கைக்கு இந்தக்கதி என்று சிங்கள மக்கள் அவரைத் துரத்தினவியள். நிலைமை இப்படியாக இருக்க, பிறகும் கோட்டா இங்க வாறது எண்டால், அதனை சிங்கள மக்கள் எப்படி அனுமதிப்பினம்.

**விதானையார்:-**

இந்த நாட்டின்ர சொத்துக்களை கபளீகரம் செய்தவர்கள் யாரென்பது சிங்கள மக்களுக்கு நன்கு தெரியும். ஆனாலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டா தங்குவதற்கு ஒரு நாடும் அனுமதி கொடுக்கவில்லை எனும் போது தான், அவர்கள் (சிங்கள மக்கள்) சற்று மனம் மாறியிருக்கினம்.

**சிறாப்பர்:-**


உண்மை தான். கோட்டா நாடு திரும்புவதற்கு அனுமதிக்க வேணும் எண்டு வாசுதேவ நாணயக்கார கூறியதில் இருந்து உண்மை நிலை என்ன என்பது தெரிகிறது தானே.

**மூப்பர்:-**

ஓ..! ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருப்பதால, கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் இலங்கைக்கு வரக்கூடிய சாத்தியம் இருக்கத் தான் செய்யுது.

இவ்வாறு மூப்பர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்த வர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**



## இராமநாதன் நுண்கலைப்பீடம் எமக்குக் கிடைத்த வரப்பிரசாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐயா வியாசரே நாய் ஏன் ஐயா குரைக் கிறது? காரணம் சொல்ல முடியுமா?






என்னப்பா கொழும்பு அரசியலில் எந்தக் கொந்தளிப்பையும் காணோமே?

**சுதன் — குப்பிழான்**

**புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடை நீக்கம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?**

ஐ.நா. அமர்வு ஆரம்பிக்கப்போகிறது. இலங்கையின் கழுத்து சர்வதேசத்தினால் தற்காலிகமாக இறுக்கப்படப் போகிறது.
அந்த தற்காலிக இறுக்கத்திலிருந்து விடுபடவே இந்த தற்காலிக தடை நீக்கம்.
அது முடிந்து விட்டால் இதுவும் முடிந்து விடும். அதன் பின் "இந்தக் கோட்டைத் தாண்டி நீயும் வரப்படாது நானும் வரமாட்டடேன்" என்ற காமடிக் கதைதான் அரங்கேறும்.
சர்வதேசத்தை ஏமாற்றும் அளவுக்கு சர்வ புத்தி கொண்டவர்களுக்கு தமிழினத்தின் பிரச்சினையைத்தீர்க்க முடியவில்லையே என்பதுதான் கவலை.

**ராதிகா — வரணி**

**தண்டவாளங்கள் சேரவே மாட்டாதா? ஏன் பிரிந்தே இருக்கின்றன?**

தண்டவாளங்கள் ஒரு நாளும் சேர்வதில்லைத்தான். ஆனால் அவை ஒரு நாளும் தன்னை நம்பியவர்களை வழிமாறிச் செல்ல அனுமதித்ததே இல்லை.
சேர்வது தான் உறவென்றால் இந்த உலகில் தியாகங்கள் என்ற சொற்பதமே வந்திருக்காது.
சேர்ந்தே இராத தண்டவாளங்கள் எத்தனையோ பேரை சரியான இடம் சேர்த்திருக்கின்றன.
கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இதுதான் வாழ்க்கையின் தத்துவமும்.
இதைப் புரியாதவரை உறவுகளுக்குள் பிரிவுகள் வந்தே தீரும்.

## அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்

**சக்தி — மாதகல்**

**என்னப்பா கொழும்பு அரசியலில் எந்தக் கொந்தளிப்பையும் காணோமே?**

என்னப்பா இப்டி கேட்டு விட்டீர்களே? போராட்டக்காரர்கள் தேடித் தேடிக் கைது செய்யப் படுகிறார்கள்.
ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு நடவடிக்கை உண்டு. என்ற கண்டிப்பான அறிவித்தல் வந்து விட்டது.
இனி எப்படி அங்கு கொந்தளிப்பு ஏற்படும் சொல்லுங்கள்?
சுற்றி சுழன்று அடிக்கும் புயலிலும் மோசமானது அமைதியாய் அடிக்கும் சூறாவளி.
இதைப்புரியாதவர்கள் பொறியில் மாட்டினால் என்னத்தை செய்துவிட முடியும்.

**இதழினி — புலோலி**

**வாழ்க்கை எதை நோக்கி பயணிக்கிறது என்று புரியவில்லையே வியாசரே?**

எப்போதும் எமது இலட்சியங்களை கைவிட்டு விடக் கூடாது.சிறு வயதில் நாம் எதற்கு ஆசைப்படுகின்றோமோ அதுவாய் எம்மை ஆக்கிக் கொள்வதாயே எமது இலட்சியம் அமைய வேண்டும்.
தவிர எதற்காகவும் எப்போதும் எமது இலட்சியங்களை விட்டு விலகிவிடுவது எமது வாழ்வைச் சீரழிக்க வல்லது.
பிரச்சினைகளை எதிர்த்து நிற்பதுதானே வாழ்க்கை. எமக்கு வாழ்வில் வரும் பிரச்சினைகளையெல்லாம் கடந்து நாம் வாழ்வில் எவ்வாறு பயணிக்கின்றோம் என்பதைப் பொறுத்ததே வெற்றி.
ஆதலால் இலக்கின்றிப் பயணித்தல் வாழ்க்கைக்கு நல்லதல்ல.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**அனி — கொடிகாமம்**

**அன்பு வியாசரே அன்பின் வெளிப்பாடு எது என்று கூற முடியுமா?**

ஒருவன் காதலிக்கு தனது இரத்தத்தால் மடல் எழுதி காதலர் தினத்தன்று பரிசளிக்கின்றான்.
அந்த மடலைப் பார்த்த காதலி தனக்கு பரிசுப் பொருட்கள் எதையும் தரவில்லை என அவ னுடன் கோபித்துக் கொண்டு சென்று விடுகிறாள். அவளுக்குப் பெரிதாகப் பரிசுப் பொருட்கள் இருந்ததே தவிர அவனின் அன்பின் ஆழம் புரியவில்லை.
தனது அன்பினைப் புரிந்து கொள்ளாத விளிடமா இவ்வளவு நாள் பழகினேன் என தன்னைநொந்துகொண்டான் அவன்.
எமக்கு பிடித்தவர்களின் கைகளை இறுகப் பற்றுதல் கூட அன்பின் வெளிப்பாடுதான்.

**மதுவன் — மீசாலை**

**நாய்க்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் பற்றிக் கூறுங்கள் வியாசரே?**

இரண்டு கைகள், இரண்டு கால்கள் உண்டு, பகுத்தறிவு ஏராளம் உண்டு. ஆனால் நன்றி கொஞ்சமும் இல்லை மனிதனுக்கு
நான்கு கால்கள் உண்டு, கையேதுமில்லை. பகுத்தறிவு சக்தியும் மிகக் குறைவு ஆனால் நன்றி அதிகம் உண்டு நாய்க்கு.

**யாரோ — யாழ்ப்பாணம்**

**ஐயா வியாசரே நாய் ஏன் ஐயா குரைக் கிறது? காரணம் சொல்ல முடியுமா?**

நாய் குரைப்பதற்கு பல காரணங்கள் உண்டு தம்பி.
பசியால் குரைக்கும், பக்கத்து வீட்டு நாயைக் கண்டதும் குரைக்கும், யாரும் வீதியால் செருப்பை உரஞ்சிக்கொண்டு நடந்தால் குரைக்கும், நிலவைப் பார்த்தால் குரைக்கும்.
வெறிகாரனைக் கண்டால் வெறி கொண்டு குரைக்கும், கிறீஸ் பூதங்களைக் கண்டால் வீட்டிற்குள் ஓடிப்போய் குரைக்கும்.
கள்வன் வந்தால் கதறிக் கதறிக் குரைக்கும், யாரும் கல்லால் எறிந்தால் காலைத் தூக்கிக் குரைக்கும், தன் எசமானைக் கண்டால் வாலை ஆட்டிக் குரைக்கும், தனக்கு உணவு தந்தவரைக் கண்டால் விம்மி விம்மிக் குரைக்கும்.
இப்படி பல குரைப்புக்கள் உண்டு. தம்பி நீங்கள் எதைக் கேட்டீர்கள் எனத் தெரியவில்லையே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

| | | |
|---|---|---|
| படம் | : | பெற்றால் தான் பிள்ளையா |
| இயற்றியவர் | : | வாலி |
| இசை | : | எம்.எஸ்.விஸ்வநாதன் |
| பாடியவர் | : | டி.எம்.சௌந்தராஜன் |



கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான்
புதுக் கவிதைகள் பிறந்ததம்மா
மன்னன் பிறந்தான் எங்கள் மன்னன் பிறந்தான்
மனக் கவலைகள் மறந்ததம்மா
கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான்
புதுக் கவிதைகள் பிறந்ததம்மா
மன்னன் பிறந்தான் எங்கள் மன்னன் பிறந்தான்
மனக் கவலைகள் மறந்ததம்மா

பிள்ளை மொழியோ அது கிள்ளை மொழியோ
வெள்ளை மனமோ அன்பைக் கொள்ளையிடுமோஓஓஓ
பிள்ளை மொழியோ அது கிள்ளை மொழியோ
வெள்ளை மனமோ அன்பைக் கொள்ளையிடுமோ
முத்து சிரிப்போ அது முல்லை விரிப்போ
நித்தம் கத்துக் குயிலோ அது கண்ணன் குரலோஓஓஓ
முத்து சிரிப்போ அது முல்லை விரிப்போ
நித்தம் கத்துக் குயிலோ அது கண்ணன் குரலோ
என்னை மறந்தேன் நான் உன்னை மறந்தேன்
இன்று தன்னை இழந்தேன்
சுகம் தன்னில் விழுந்தேன்

கண்ணன் பிறந்தான் எங்கள் .....
புதுக் கவிதைகள் பிறந்ததம்மா
மன்னன் பிறந்தான் எங்கள் மன்னன் பிறந்தான்
மனக் கவலைகள் மறந்ததம்மா

கன்னங்கருப்போ சுடும் கண்கள் நெருப்போ
என்ன நினைப்போ அது இன்பத்தவிப்போஓஓஓ
கன்னங்கருப்போ சுடும் கண்கள் நெருப்போ
என்ன நினைப்போ அது இன்பத் தவிப்போ
தொட்ட குறையோ முன்பு விட்ட குறையோ
அது எண்ணத் துடிப்போ இல்லை என்ன நடிப்போ
தொட்ட குறையோ முன்பு விட்ட குறையோ
அது எண்ணத் துடிப்போ இல்லை என்ன நடிப்போ
கண்ணை அளந்தேன் அதில் பொன்னை அளந்தேன்
பிள்ளை நெஞ்சை அளந்தேன் புதுப் பூவை அளந்தேன்

கண்ணன் பிறந்தான் எங்கள் ......

கண்ணில் எடுத்தேன் நெஞ்சைக் கையில் கொடுத்தேன்
சொல்லத் துடித்தேன் அதை சொல்லி முடித்தேன்
சொல்லத் துடித்தேன் அதை சொல்லி முடித்தேன்
ராதை நினைப்பாள் அங்கு கண்ணன் இருப்பான்
அந்த கோதை சிரிப்பாள்அதைக் கண்டு ரசிப்பான்
அதைக் கண்டு ரசிப்பாள்
ஒன்றை நினைத்தேன் அந்த ஒன்றை அடைந்தேன்
என் அன்பைத் தருவேன்அந்த அன்பைப் பெறுவேன்

கண்ணன் பிறந்தான் எங்கள் .....

# வடகொரிய அரசியலில் கோலோச்சும் முதல் பெண்

வடகொரியா ஒரு மர்ம தேசம். அங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது வெளி உலகுக்குத் தெரியாது. எப்போதாவது வடகொரிய அரசுச் செய்தி ஊடகமான 'கொரியன் சென்ட்ரல் நியூஸ் ஏஜென்சி' (கே.சி.என்.ஏ) வெளியிடும் காணொளிகளையும் செய்திகளையும் வைத்துத் தான் அங்கு என்ன நடக்கிறது என்பதை ஓரளவுக்குத் தெரிந்து கொள்ள முடியும். இந்த நிலையில், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் இளைய சகோதரி கிம் யோ ஜாங்-கின் உரை குறித்து கே.சி.என்.ஏ வெளியிட்டிருக்கும் செய்திகள், உலகம் முழுக்க கவனம் பெறத் தொடங்கியிருக்கின்றன. கிம் யோ ஜாங் யார்... வடகொரிய அரசியலில்அவரதுபங்கு என்ன?

தென்கொரியாவுக்கு எச்சரிக்கை!

சமீபத்தில், 'கொரோனா தொற்றை எதிர்த்து வடகொரியா வெற்றி பெற்றுவிட்டது' என்று ஜனாதிபதி கிம் ஜாங் உன் அறிவித்திருப்பதாகச் செய்தி வெளியிட்டது கே.சி.என்.ஏ ஊடகம். இது குறித்து ஜனாதிபதியின் சகோதரி கிம் யோ ஜாங், "தென்கொரியா, எல்லையைத் தாண்டி பலூன்கள் மூலம் துண்டுப்பிரசுரங்கள் அனுப்பி (தென்கொரிய ஆர்வலர்கள், வடகொரியாவுக்கு எதிரான பிரசாரங்களை பலூன்களில் கட்டி, அந்த நாட்டுக்குள் அனுப்புவது வழக்கம்) வடக்கில் கொவிட் தொற்றைப் பரப்பியிருக்கிறது. தொற்று உள்ள பொருட்களை பலூன் மூலம்அனுப்புவதுமனித குலத்துக்கு எதிரான செயல். இதற்கு வடகொரியா தக்க பதிலடி கொடுக்கும்" என்று தனது உரையில் கூறியிருப்பதாக கே.சி.என்.ஏ தெரிவித்திருக் கிறது.

மேலும், "ஜனாதிபதிகடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார். இருந்தும், இந்தத் தொற்று நோய்க்கு எதிரான போர் முடியும் வரை, அவர் மக்களைப் பார்த்து கொள்ள வேண்டிய அவசியம் இருந்ததால், ஒரு நிமிடம் கூட ஓய்வெடுக்கவில்லை" என்றும் கிம் யோ ஜாங் குறிப்பிட்ட தாகவும் கே.சி.என்.ஏ கூறி யிருக்கிறது.

இந்த உரை மூலம் கிம் யோ ஜாங் உலக கவனத்தைத் தன் பக்கம் திருப்பியிருக்கிறார். இதற்கு முன்பாகவும் சில முறை அவர் மீது உலக வெளிச்சம் பாய்ந்திருக்கிறது. 2020 ஆம் ஆண்டே அவர் தான் அடுத்த வடகொரிய ஜனாதிபதி என்ற பேச்சுகளும் எழுந்தன.

யார் இந்த கிம் யோ ஜாங்?

முன்னாள் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் இல்-லின் இளைய மகள் தான் கிம் யோ ஜாங். 2007 முதல் வடகொரியத் தொழிலாளர் கட்சியில் இணைந்து செயற்பட்டுவரும் இவருக்கு, தற்போது 34 வயது இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. கிம் யோ ஜாங்கை, இந்த உலகுக்கு முதன்முதலில் வெளிச்சம் போட்டுக் காட்டியது தென்கொரியாவில் நடந்த வின்டர் ஒலிம்பிக்ஸ் போட்டிதான்.

2018 இல், தென்கொரியாவில் நடந்த வின்டர் ஒலிம்பிக்ஸில் வடகொரியா, தென்கொரியா என இரு நாடுகளும் ஒன்றாக இணைந்து கலந்து கொண்டன. இதன் காரணமாக வடகொரியா சார்பில் தென்கொரியாவுக்குச் சென்றிருந்தார் கிம் யோ ஜாங். அங்கு தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன், முன்னாள் அமெரிக்கத் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ், முன்னாள் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோரோடு கிம் யோ



ஜாங் எடுத்துக்கொண்ட புகைப்படம் மிகப்பெரிய வைரலானது.

இதையடுத்து, சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்-கைச் சந்தித்ததன் மூலம், வடகொரியாவின் மற்றுமொரு அரசியல் முகமாக மாறினார் கிம் யோ ஜாங். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப், மூன்று முறை வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னைச் சந்தித்தபோதும் தனது சகோதரருடன் இருந்தார் கிம் யோ ஜாங். பல முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் சந்திப்புகளில் கிம் யோ ஜாங் இடம் பெற்றிருந்ததால், சர்வதேச அரங்கில் கவனம் பெற்றார். பின்னர், ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் முக்கிய அரசியல் ஆலோசகராகவும் மாறினார்.

2020 இல், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் இறந்து விட்டதாகச் செய்திகள் பரவின. அந்தச் சமயத்தில், தென் கொரிய முன்னாள் ஜனாதிபதி கிம் டே ஜங்கின் உதவியாளர் சாங் சங் மின் "கிம் ஜாங் உன் இறக்கவில்லை. ஆனால், கோமாவில் இருக்கிறார்.

ஆட்சிப் பொறுப்புகள் அனைத்தும் ஜனாதிபதியின் சகோதரி கிம் யோ ஜாங்கிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன" என்று கூறியிருந்தார். அப்போதே 'கிம் யோ ஜாங் தான் வடகொரியாவின் அடுத்த ஜனாதிபதியாக இருப்பார்' என்ற செய்திகள் உலவின.

தொடர்ந்து 2021 ஒக்டோபரில், வடகொரியாவின் 'மாநில விவகார ஆணையக் குழு' வின் உறுப்பினராக்கப்பட்டார் கிம் யோ ஜாங். வடகொரிய அரசின் உயர்மட்டக் குழுவான, மாநில விவகார ஆணையக்குழுதான் அரசின் முக்கிய முடிவுகளை எடுக்கும் எனக் கூறப்படுகிறது. 2021 ஆம் ஆண்டின் மத்தியில், இந்தக் குழுவின் உறுப்பினர்கள் சிலர் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றனர்.

சிலர் முறையான காரணங்கள் சொல்லப்படாமல் நீக்கப்பட்டனர். இதையடுத்து, இந்தக் குழுவில் புதிதாக எட்டு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர்தான் கிம் யோ ஜாங். இந்த உயர் மட்டக்குழுவில் இடம்பெற்றிருக்கும் ஒரே பெண் இவர் மட்டுமே.

கடந்த ஓரிரு ஆண்டுகளில், தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு எதிரான சில எச்சரிக்கை அறிக்கைகள் கிம் யோ ஜாங்கின் பெயரோடு வெளியாகியிருக்கின்றன. இது, அவர் வடகொரிய அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக மாறியிருப்பதை உணர்த்துகிறது.

தென்கொரியா, தொடர்ந்து கிம் ஜாங் உன்னின் உடல் நிலை மோசமாக இருப்பதாகக் கூறிவருவதால், வடகொரியாவின் அடுத்த ஜனாதிபதி கிம் யோ ஜாங் தான் என்ற பேச்சுகள் தற்போது அதிகமாகியிருக்கின்றன. "ஆண்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த வடகொரிய அரசியலில், ஒரு பெண் ஜனாதிபதினால் அங்கு பல மாற்றங்களும் முன்னேற்றங்களும் நிகழ வாய்ப்பிருக்கிறது" என்கின்றனர் சர்வதேச அரசியல் வல்லுநர்கள்...

முரட்டுத்தனமான, முட்டாள்தன்மான, பிற்போக்குத்தனமான திட்டங்களையும் விதிகளையும் அறிவித்துவரும் கிம் ஜாங் உன்னின் இடத்துக்கு, கிம் யோ ஜாங் வருவாரா... அப்படி வந்தால் வடகொரியாவில் மாற்றங்கள் ஏற்படுமா என்பதற்கான பதிலைக் காலம் தான் சொல்ல வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

## வலி சொல்லும் தொடர்... 44

**குற்றமே செய்யாமல், போர் செய்வது எப்படி முடியாத காரியமோ, அது போலத்தான் துரோகமே செய்யாமல், ஒரு வாழ்க்கைக்கு எங்களை ஒப்புக்கொடுப்பதும் மிகப்பெரிய பழி. இந்த உலகின் எல்லா உண்மைகளின் பின்னணியிலும் மிகப்பெரிய பொய்களின் கள்ள வாசனை ஒட்டியிருப்பதுபோல, தவறுகளின் பாதைகளுக்கும் உண்மைதான் கதவு திறந்து விடுகின்ற அரும்பணியையும் செய்து விடுகிறது.**

விருந்தினர் மண்டபத்திலிருந்து தனது அறைக்கு வந்தது நீதனுக்கு நினைவில்லை. உள்ளே கதவைப் பூட்டிவிட்டு, அதில் சாய்ந்து நின்றுகொண்டிருந்த தனது கால்களில் மெல்ல மெல்ல குளிர் படரத்தொடங்குவதுபோல உணர்ந்தான். மேலுடம்பு கொதித்தது.

அவனால் தன்னை நிலைப்படுத்தவோ, எதையும் சிந்திக்கவோ முடியவில்லை. தன்னுடலில் ஒரு படகின் ஆட்டத்தை உணர்ந்தான்.

"இரண்டு மூன்று நாட்கள் டைம் தா ராதா."

சொல்லிவிட்டு எழுந்தபோது, அவள் இறுக்கி அணைத்துத் தந்த முத்தம், கன்னத்தின் வழியாக தனக்குள் கதவு திறந்து நுழைந்தது போலிருந்தது.

அறையினுள் கனத்த இருட்டு பரவியிருப்பது போல் உணர்ந்த நீதன், மெல்ல நகர்ந்து சென்று கட்டிலில் அமர்ந்தான். வெளியில் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களின் கூச்சல்கள் மங்கலாகக் காதில் விழுந்தன.

திடீரென்று அடிவயிற்றைப் பிசைந்து குடலை உருவியெடுத்து வெளியில் தள்ளியது போல வாந்தி வர, ஓடிச் சென்று கழிவறையில் முகம் கவிழ்த்தான். பொங்கலும், தின்ற பழசுகளும் கருந்திரவமாகப் பெருக்கெடுத்து ஓடின. கண்களின் முன்னால் நட்சத்திரங்கள் திசைக்கொன்றாகக் காற்றில் வெடித்தன. மூச்செடுப்பதற்கே அனுமதி வழங்காத வாந்தி ஆறாக ஓடியது.

உலகின் கடைசிக் கணமொன்றில், தான் உடைந்து திரவமாக ஓடுவது போலிருந்தது நீதனுக்கு.

வெளியில் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

நீதன் வாந்தியெடுத்த சத்தம் கிட்டத்தட்ட 'அல்பா கம்பவுண்ட்' முழுவதற்கும் ஒலிபரப்பாகியதில், சக அகதிகளுடன் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கூடவே நீதனின் அறைக்கு ஓடிவந்தார்கள். அறை உள்ளே பூட்டியிருந்தாலும் தங்களது சாவியைப் போட்டுத் திறந்து உள்ளே வந்த உத்தியோகத்தர்கள், நீதன் முழந்தாளில் கிடந்து வாந்தியெடுக்கும் காட்சியைப் பார்த்த மாத்திரத்திலேயே

"ரெஸ்போன்ஸ் ரெஸ்போன்ஸ் கோர்ட் புளு" - என்று வானொலியில் கூவினார்கள்.

நீதனுக்குக் கண்கள் இருண்டன. வாந்தியெடுத்ததில் களைத்த உடம்பு, அருகிலிருந்த சுவரில் அவனை மீறிச் சாய்ந்தது. ஓடிச் சென்று அவனைத் தாங்கிய உத்தியோகத்தர்கள், வாயைத் தண்ணீரால் அடித்துக் கழுவினார்கள். கட்டிலில் கிடந்த துவாயை எடுத்து, முகத்தை ஒற்றியெடுத்தார்கள். மெதுவாகத் தூக்கி வந்து அவனைக் கட்டிலில் கிடத்தினார்கள்.

ஓடிவந்த தாதியர்கள், அறைக்குள் வந்த மாத்திரத்தில் ஜன்னலைத் திறந்து காற்றோட்டத்தைச் சீர்படுத்தினார்கள்.

பழைய உணவுகள் வயிற்றில் சிக்கலைக் கொடுத்திருக்கின்றன என்று கூறி, இரண்டு மாத்திரைகளை நீதனுக்கு ஊட்டி விட்டார்கள்.


"இதற்கெல்லாம் எங்களை அழைக்கிறீர்களே" என்ற வெறுப்போடு, பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பார்த்து முகத்தை முக்கோணமாக வைத்தபடி அங்கிருந்து வெளியேறினார்கள்.

'அல்பா கம்பவுண்ட்' சக அகதிகள், ஒவ்வொருவராக நீதனைப் பார்ப்பதற்கு வெளியே வரிசை கட்டினார்கள். தாதியர்கள் வெளியேறிய கையோடு "அவன் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்" என்று யாரோ சொன்னதும், அதை ஏற்றுக் கொண்டு எல்லோரும் அங்கிருந்து வெளியேறினார்கள்.

கதவை மெதுவாக மூடிச் சென்ற மாத்திரத்திலேயே, நீதன் சாதுவாகக் கண்களைத் வழியாக அறைக்குள் வழிந்த காற்று, உடலில் மோதி, பொட்டுப் பொட்டாக எரிவது போலிருந்தது.

கொப்புளங்களால் தனது தோல் வெடிப்பது போலிருந்த முகத்தை ஒரு கணம் சோர்ந்த விரல்களினால் வருடிப் பார்த்தான்.

அதன் பிறகு, பேரச்சத்தோடு தலையைத் திருப்பி, பக்கத்தில் ஒட்டப்பட்டிருந்த அனீஸாவினதும் லியோவினதும் படத்தைப் பார்த்தான்.




வெளியில் சிறுவர்கள் கூச்சலிடுவது இப்போது பேரொலியாகக் கேட்டது. காதுக்குள் இறங்கி நின்று கத்துவது போலக் கேட்ட அந்தச் சத்தம், தன்னை நகைத்தெழுப்பும் கூச்சல்களாக அவனுக்கு முகத்தில் அறைந்தன.

எந்தத் தீர்மானத்துக்கும் முதல் மூலதனம் சுயநலம். அதுதான் வெற்றியில் இரகசிய விதி.

குற்றமே செய்யாமல், போர் செய்வது எப்படி முடியாத காரியமோ, அதுபோலத்தான் துரோகமே செய்யாமல், ஒரு வாழ்க்கைக்கு எங்களை ஒப்புக்கொடுப்பதும் மிகப்பெரிய பழி.

இந்த உலகின் எல்லா உண்மைகளின் பின்னணியிலும் மிகப்பெரிய பொய்களின் கள்ள வாசனை ஒட்டியிருப்பதுபோல, தவறுகளின் பாதைகளுக்கும் உண்மை தான் கதவு திறந்து விடுகின்ற அரும்பணியையும் செய்து விடுகிறது.

நீதனின் கண்களுக்குள் மெது மெதுவாக இருள் நுழைந்து கொள்கிறது.

அரிவு வெட்டு முடிந்த வெட்டையான வயல் நடுவில் நீதன் அப்போதுதான் நித்திரை விட்டு எழுகிறான். படுப்பதற்கு முன்னர் பஞ்சு உதிர்த்து விட்டது போல முகில்களால் நிறைந்து கிடந்த வானம், இப்போது தலை குனிந்து பார்த்தபடி கறுத்துக் கிடக்கிறது.

மெதுவான காற்று தூரத்தில் புழுதியைக் கிளப்பிக் கொந்தளிக்கிறது.

உடலை நகர்த்தி எழுந்தபோது, காலடியில் ராகவன் மாஸ்டர்.

"நீதன்"

வார்த்தைகளைக் கோர்த்துக் கொள்ள முடியாமல் திணறி அழுகிறார்.

தான் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலிலிருந்து உதறி எழுகின்ற நீதனிலிருந்து செதில்கள் கொட்டுகின்றன. எழுந்தோடி வந்த ராகவன் மாஸ்டர், அழுதுகொண்டு நீதனின் உடம்பிலிருந்து செதில்களைத் தட்டி விடுகிறார். இறந்த தசைக்கழிவுகள் சருகுகளாக அவனிலிருந்து விழுகின்றன. ராகவன் மாஸ்டரையே நீதன் பார்க்கிறான்.

சற்று திரும்பிப் பார்த்தபோது, புழுதியெழும்பும் காற்றுவழி அனீஸா கையில் ஒரு குழந்தையோடு நடக்கிறாள்.

லியோ அவளது கையைப் பிடித்தபடி போகிறான். ஒரு கணம் திரும்பிப் பார்த்தவள், நீதனுக்குக் கையசைத்து விட்டு, திரும்பிப் பாராமலேயே நடக்கிறாள்.

"அங்க பார்க்காத நீதன், தயவு செய்து, முதல் தடவையா கெஞ்சிக் கேட்கிறன். என்னைப் பார்" என்கிறார் ராகவன் மாஸ்டர்.

காலடியில் விழுந்த செதில்கள் குவியலாகக் கிடக்கின்றன. இரண்டு கைகளாலும் நீதனின் தாடையைத் தாங்குகிறார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையால் மாறும் பாதை

போகும் பாதை நீயறியாய்
போதை உனக்குத் துணையா?
பேதைப் பெண்களை கண்டால்
வாதைத் தொடங்குகிறாய்
மாதைக் கண்டால் முத்தமிட
அருகே ஓடுகிறாய்
பாதை மாறுமுன்னை தேடுகிறார்
சாலையில் பலர்முன் நையப்புடைக்க
நீயென்ன ஜென்மமெடுத்தாய்?
உன் தாயும் பெண்தானே
உன் சகோதரியும் பெண்தானே
பெண்களை வாழவிடு
கல்வியில் கனவானாய்,
கவிதை சொல் பாவலனாய்!
வித்தையில் வல்லவனாய்,
வானுயர் விஞ்ஞானியாய்!
வருவாயென்ற கன
கனவுகள் காய்ந்ததடா
கண்ணீர்தான் கைம்பெண்ணின்
வாழ்க்கையடா.

மானந்தன்,
அல்வாய்.

## மீண்டும் வாரும் அம்மா என் தாயாய்



உடலுக்குள் உயிர் வளர்த்து
உதிரத்தை பாலாக்கி ஊட்டி வளர்த்த தாயே

தாலாட்டி, தமிழ் ஊட்டி, பாராட்டி
படிப்பூட்டி, வளர்த்த தாயே

சிந்தையில் வைத்து
முழுநிலவாய் நான் திகழ
முன் நிலவாய் நின்ற தாயே

இன்ப வாழ்வு எனக்கு
ஈடில்லா செல்வம் எனக்கு
வாழை போல் சிரிப்பு எனக்கு
நோயுற்ற வாழ்வு உனக்கு
நொடியில் சென்றாய்
வானுலகுக்கு

நினைத்து நினைத்து நெஞ்சுருகுதம்மா
மீண்டும் வர வேண்டும் என் தாயாக...

எஸ்.கலாமணி,
மண்டைதீவு.

## அவல நிலை

எரிபொருள் நிரப்பு நிலையத்தில்
பசியால்
துடித்த தன் குழந்தைக்கு
இப்படிப் புட்டிப்பால்
ஊட்டும் அன்புத் தாயே
நம் நாட்டு அன்புத் தாயே
நம் நாட்டு அரசின் தவறான
பொருளாதாரக்
கொள்கைகளால் நமக்கு இன்று இந்த
நிலை நேர்ந்தது
அதைப் பார்க்கும் நம் மனமோ வெந்து
நொந்தது.

சுப்பிரமணியம் ஜெயரூபன், பருத்தித்துறை

## வியாபாரி!

எரிவாயுவும் எரிபொருளுமாய்
வைத்திருந்தேன்
இப்போ காசாய் வைச்சிருக்கிறேன்!
இனி ஊரெல்லாம் வீடுகளாய்
வைத்திருப்பேன்!
போராட்ட காலங்களில் பொருட்களை
பதுக்கி விற்பதில் சிறந்த வல்லுநர் என்ற
பட்டத்தை நானே பெறப்போகிறேன்
என் மாவட்டத்துக்கு பெருமை சேர்க்க
போகிறேன்.

தி.பரணிபாரதி.

## மௌனத்தின் தேடல்- 571



## காகச் சந்தையிலே

ஏழைகளின் இயல்புக்கு ஏற்ற
இரட்சிக்கும் வாகனமே ஆட்டோ
கூழையே காணாத வயிற்றுக்கு
கொதிநீராக ஆகிவிட்ட விலை ஏற்றம்
மனச்சாட்சி இல்லாத மாந்தர் சமூக
நீதியதைச் சாகடிக்கும் பாங்கில்
பெற்றோலை காகச் சந்தையிலே
விற்றலாபத்தில் வாழ்வதென்ன நீதி.

**கார்வண்ணன்,**
**காவலூரர்.**

## நவநாகரிகம்

பாசத்தோடு தாய்ப்பால் புகட்டி
ஏணை ஊஞ்சல் ஆட்டி
இனிமையான தாலாட்டுப் பாடி
உறங்கும் குழந்தைக்கு
தெருவோரத் திண்ணையில்
நவநாகரிக நங்கையால்
புட்டிப் பால் புகட்டப்படுகிறது.

பி.யதுர்சன்,
கொக்குவில் இந்து கல்லூரி.

## வண்டி வாராத...

எரிபொருள் விலை ஏற்றம்
ஏழைகளின் பசி வயிற்றிலே
எரியும் நெருப்பாக உண்டி
வைத்தியசாலைக்கும் வண்டி
வாராத உயரத்தில் கூலிச் சாவு இனி
வரும் காலத்தில் காற்றுக்குமாம்
விலை வாரும் கடவுளுக்கும்
இதுதான் நீதி.

சாமிபுத்திரன்,சரவணை.

## எண்ணூறை...

வரிசையிலே நிற்பதுவும் கடினம்
பெற்றோல் வழங்கு நிலையமதில்
நெரிசலுக்குள் சிக்குண்டு சீவன்
தரிக்க இடம் தெரியாது சாவு
கறுப்பு சந்தையிலே லீற்றர்
நாலு ஐந்து ஆயிரமாம் தீர்வு
முன்னூறுக்கு ஓடிய தூரம் இப்போ
எண்ணூறை எட்டியதா நியாயம்.

வைகதன்,கொக்குவில்.

## காத்திருப்பு

எரிபொருளுக்காய் காத்திருக்க
தங்கமே பசி உன் உடலை வாட்ட
மனம் நெருப்பு பிளம்பாய் நெருங்கி சாம்பலாகி
உள்ளத்திற்கு உள்ளே பல பூகம்பங்கள்
வெடித்து எரிமலையாய் எரிந்தது
புட்டிப்பால் இன்றி எனக்கு வேறு என்ன வழி
விதி வந்து என்னை வீதியோரம் கொண்டு வந்தது.

[illegible]

## மௌனத்தின் தேடல்- 572



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## கானல் நீராய்!

ஓங்கார உள ஏக்கம் என்னுள்
கலர் சட்டைகள் எல்லாம் கறைசட்டைகளாய்
சிட்டியடித்து வீடு திரும்பிய காலங்கள்
-வெறும் கானலாய்
கானல் நீர் மீன்களாய் தோழர்களின்
அழகு நட்புகள்
அனைத்தும் கால மாற்றத்தின் கனவுகளானதே!

க.யதிஸ்ரன்,நெல்லியடி.

## தாய்ப்பால்

அம்மா,அப்பா என சம்பந்தக் குழந்தை அழுதது.
அம்மை அப்பர் பொற்கிண்ணத்தில் கொடுத்தது
புட்டிப்பால் அல்ல; தாய்ப்பால்.

பிரமன், கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு அவர் அன்றைய அதிபர் ஆப்ராஹாம்லிங்கனை அணுகி இத்திட்டத்தின் பலன்கள் குறித்து விவாதித்தார். லிங்கனின் அனுமதி பெற்ற பிறகு கிழக்கிலிருந்து யூனியன் பசுபிக் என்ற நிறுவனம் தொடங்குவது என்றும் ஒப்பந்தமானது.

மத்திய பசுபிக் நிறுவனம் தங்கள் பணிகளைத் துரிதமாக முடிக்க கடும் உழைப்பாளிகளான சீன ஒப்பந்தத் தொழிலாளர்கள் 50000 பேரை


## உலகின் தொழில் திறன் அதிசயங்கள் பகுதி - 1

பணிக்கு அமர்த்தியது. அதே சமயம் ஜெனரல் கிரன்வி லிடாட்ஜ் என்பவர் தலைமையில் இயங்கிய யூனியன் பசுபிக் நிறுவனம் அயர்லாந்திலிருந்து தொழிலாளர்களை அழைத்து வந்திருந்தது. 1862 ஆம் ஆண்டு ஒரே சமயத்தில் இரு முனைகளிலிருந்தும் தொடக்கப்பட்ட இந்தப் பணி 1869 ஆம் ஆண்டு உடா மாகாணத்தில் ஒரு இடத்தில் முடிவுக்கு வந்தது. சுமார் 32000 மைல் தூரம் (51.499 கி.மீ) நீளமுள்ள இந்தப் பாதையைக் கடக்க அன்றைய தினம் 1000 டொலர்கள் போக்குவரத்துக்கு மட்டும் செலவானதாம். இந்த இருப்புப்பாதைத் திட்டம் நிறைவேறிய பிறகு வெறும் 150 டொலர்கள் மட்டும் தேவைப் பட்டதாம்.

எண்ணற்ற விபத்துக்கள், அமெரிக்க பழங்குடி இன மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள், பணப்பரிமாற்றத்தின்போது நடந்த ஊழல் குற்றச்சாட்டுக்கள், அனுபவக் குறைபாடு காரணமாக நடந்த குளறுபடிகள் என இந்த ரயில் பாதை நெடுக சுவாரசியமான சோகமான பரபரப்பான சம்பவங்கள் ஒரு புத்தகம் எழுதும் அளவுக்கு நிகழ்ந்திருக்கின்றன.

இன்னும் சில ஆண்டுகளில் தனது 150 ஆண்டு விழாவை கொண்டாட இருக்கின்ற அமெரிக்க மத்திய பசுபிக் ரயில்வேயில் இன்றைக்கு சுமார் 50000 பேர் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

ரயில்வே துறையில் உலகெங்கும் இன்றைக்கு பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டு வந்தாலும் இந்த ரயில் பாதை தொழில் துறையில் குறிப்பிடத்தக்க மைல் கல் என்றே கருதப்படுகிறது.



## உலகின் தொழில்திறன் அதிசயங்கள் - பகுதி 2

லாஸ் வேகாஸிலிருந்து தென்கிழக்கில் 30 மைல் தூரத்தில் ஓடும் கொலராடோ நதியின் மேல் கட்டப்பட்டிருக்கும் அணை 1936 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. 1250 அடி நீளமும் 730 அடி உயரமும் உள்ள இந்த அணை கொலராடோ நதியின் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்துவதற்கும் நீர்ப்பாசனத்திற்கும் மின்சார உற்பத்திக்காகவும் கட்டப்பட்டது.

முதலில் இந்த அணை பவுல்டர் நகரத்துக்கு அருகே அமைந்திருந்ததால் பவுல்டர் அணை என்று அழைக்கப் பட்டது. பின்னர் 1947 ஆம் ஆண்டு 31 ஆவது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஹெர்பர்ட் ஹூவர் என்பவரின் ஞாபகார்த்தமாக "ஹூவர் டாம்" என்று பெயர் சூட்டப்பட்டது என்று பெரும்பாலோர் கூறுகிறார்கள். ஆனால் இன்னும் ஒரு சிலர் இந்த அணையைக் கட்டுவதில் முக்கியப் பங்கு வகித்த எர்பர்ட் ஹூவர் என்பவரின் நினைவாக இது ஹூவர் அணை எனப் பெயரிடப்பட்டதாக கூறுகிறார்கள்.

இது அமெரிக்காவின் அரிசோனா நெவாடார் மாநிலங்களுக்கிடையில் அமைந்துள்ளது.

(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2693

**ரமனா**

AB க்கு போர் அடிச்சா என்ன செய்யும்?
CD போட்டு பாக்கும்...

EF க்கு உடம்பு ச்ரியில்லைனா எங்க போகும்?
GH க்கு போகும்..

IJKL க்கு எனிமி யாரு?
MN (எமன்) தான்...

OP ரேசனுக்குப்போனா ?
Q ல தான் நிக்கும்...

RS க்கு தலை வலிச்சா?
T குடிக்கும்...

UVWXY க்கு பறக்கனும்னா?
Z (ஜெட்)ல போகும்.

**மாதவி**

அடுத்தவன் தப்பா நினைப்பான்னு செத்து வாழ்வதை விட நம்மள தப்பா நினைக்க அவன் யாருன்னு கெத்தா வாழ்ந்திடனும்.

**கிருஷ்ணன்**

பெண்: ஹலோ இது கஸ்டமர் கேர் தானே?
கஸ்டமர் கேர்: ஆமாம் சொல்லுங்க மேடம்
பெண்: என் அஞ்சு வயசு பையன் சிம் கார்டு ஐ விழுங்கிட்டான்.
கஸ்டமர் கேர்: அப்படினா டாக்டர் கிட்ட கூட்டி கிட்டு போங்க மேடம்
பெண்: இல்லை அதுல 95 பைசா பேலன்ஸ் இருந்துச்சி. அவன் பேசும்போது காசு போகுமா சார்?
கஸ்டமர் கேர்: ?????

**தீபா**




**வெங்கட்**

பெண் பிள்ளைகளிடம் பிறந்த வீட்டிலிருந்து என்ன கொண்டு வந்தாய் எனக் கேட்கும் சமூகம் பிறந்த வீட்டிலிருந்து எதையெல்லாம் விட்டு வந்தாய் என்று கேட்பதில்லை.



**சுஜா**

நமது கனவுகளை வெளியே சொல்லக் கூடாது. அதனை சாதித்து காட்ட வேண்டும்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் [illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

304

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உயர் குருதி அமுக்கம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**உயர் குருதி அழுக்கத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கும் காரணிகள்**

1. சலரோகம் போன்றன தாய், தகப்பன் அல்லது மாமா, மாமிக்கு இருப்பின் பிள்ளைகளுக்கு இந்நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். எனவே இவர்கள் குறைந்த வயதில் இருந்தே 30-35 இருந்து தங்கள் குருதியமுக்கத்தை அளத்தல் வேண்டும்.

2. ஆண்களாக இருத்தல்

3. குறைந்த வயதில் மாதவிடாய் தடைப்படல்

4. வயது அதிகரித்தல்.

5. ஆசியாவில் பிறந்தவர்கள்.

**உயர் குருதியமுக்கம் இருப்பின் வேறு என்ன பரிசோதனைகள் தேவை?**

1. சலத்தில் புரதம் அல்லது சலத்துடன் இரத்தம் வெளியேறுதல்.

2. சிறுநீரகத்தின் தொழிற்பாடு பற்றிய இரத்தப்பரிசோதனை, இரத்தத்தில் கொழுப்பினளவு, இரத்தத்தில் சீனியின் அளவு.

3. ஈசிஜி பரிசோதனை மற்றும் சோதனை செய்வதற்கான காரணம்

1. உயர் குருதியமுக்கத்திற்கான பின்னணி காரணங்களை நிராகரிப்பதற்கு அவையாவன. - சிறுநீரக பரிசோதனை, ஈ.சி.ஜி.

1. உயர் குருதியமுக்கம் ஏற்படுவதற்கான காரணங்களை அறியும் சோதனை

**எனது உயர்குருதியமுக்கத்தை எவ்வாறு குறைக்கலாம்.**

இரண்டு முறைகளில் குருதியமுக்கத்தை குறைக்கலாம்.

a) வாழ்க்கை முறையில் மாற்றத்தை கொண்டு வருதல்.


b) மருந்துகள் பாவிப்பதன் மூலம்

வாழ்க்கை முறையில் செயற்படுத்தக்கூடிய முறைகள் பற்றி பார்ப்போம்.

1. உங்கள் நிறையை உங்கள் உயரத்திற்கு ஏற்றவாறு வைத்தல் உதாரணமாக உங்கள் உயரம் 160 cm எனின் அதில் இருந்து 100 ஐ கழிப்பதன் மூலம் உங்கள் நிறை 60 kgt 5kg ஆக இருத்தல் நன்று அல்லது BMI 23-25 இற்குள் இருத்தல் நன்று.

2. ஒழுங்கான தேகப்பயிற்சி குறைந்தது 30 நிமிடங்கள் கிழமையில் 5 நாட்கள் அல்லது 60 நிமிடங்கள் குறைந்தது 3 நாட்கள் செய்யலாம். உ+ம்- 1. விரைவாக நடத்தல் 2. நீந்துதல் 3. விளையாடுதல் 4.சைக்கிள் ஓடுதல்.

3. உடலுக்கு உகந்த உணவு வகைகளை உண்ணல்



- ஒருநாளைக்கு குறைந்தது 250 gram மரக்கறிகளும் 150 gram பழவகைகளும் ஒருவர் தமது உணவில் சேர்த்தல் நன்று
- கோதுமை மா, அரிசி மா, உணவுவகைகளை தவிர்த்து ஆட்டா மா, குரக்கன் மா, கடலை வகைகள், தானிய வகைகள், உழுந்து என்பவற்றில் உணவுகளை தயாரித்து அருந்துதல் நன்று.
- கொழுப்பு உணவுகளை தவிர்த்தல்.
- அதிகளவில் புரத உணவுகளை உட்கொள்ளல்
- நல்லெண்ணெய், சூரிய காந்தி எண்ணெய் வகைகளை பாவித்தல் பொரிப்பதை தவிர்த்து வதக்கி உணவுகளை ஆக்கி உண்ணல்
- உப்பின் அளவை முடிந்தளவு குறைத்தல். Note-(உப்பு அதிகமாக உணவில் சேர்வதால் உயர் குருதி அமுக்கத்தை குறைப்பது கடினம்.)
- கோப்பி, தேநீர் அருந்துவதை குறைத்தல்.
- மதுபானம், சிகரட் பாவனைகளை முற்றாக தவிர்த்தல்.

4. மருந்துகள் மூலம் குருதிய முக்கத்தை கட்டுப்படுத்துதல் ஒருவருடைய குருதியமுக்கம் வாழ்க்கை முறைகளில் மாற்றத்தின் பின்னரும் அதிகமாக இருப்பின் (>140/90) மருந்து வகைகள் பாவிக்க வேண்டி வரும் உங்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளை ஒழுங்காக எடுக்க வேண்டும்.

**உங்கள் குருதியமுக்க த்தை எவ்வளவுக்கு குறைவாக வைத்தல் வேண்டும்?**

சாதாரணமாக உயர்குருதியமுக்கம் உள்ளவர்கள் தங்கள் குருதியமுக்க அளவை 140/90 குறைவாகவும் சலரோகம் உள்ளவர்கள் 130/85 குறைவாகவும் சீறுநீரக பாதிப்புள்ளவர்கள் 120/80 குறைவாகவும் வைத்திருப்பது நன்று. மருத்துவ ஆலோசனையைப் பெறவும்.

**எவ்வளவு காலம் மருந்துகள் எடுக்க வேண்டும்?**

அநேகமாக உங்கள் வாழ்க்கை காலம் முழுவதும் நீங்கள் மருந்துகள், உணவுக்கட்டுப்பாடுகள், அப்பியாசங்கள் செய்தல் வேண்டும்.

உங்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி நடக்கவும் இவற்றுடன் நாங்கள் முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டியது என்னவென்றால் மன அழுத்தத்தை குறைத்தல் வேண்டும்.

இதற்காக கோயிலுக்கு குடும்பமாக போதல், தியானம் செய்தல், நல்ல பொழுது போக்குகளில் ஈடுபடுதல், மனதை அமைதியாகவும் இறைசிந்தனையுடனும், நல்ல எண்ணங்களுடனும் வாழப் பழகுவோமானால் உயர் குருதியமுக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்து பாதகமான பக்கவிளைவுகளில் இருந்து விடுபட்டு நலமாக வாழ முடியும்.

Dr.T.பேரானந்தராசா
பொது மருத்துவ நிபுணர்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும், அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் போகத்திற்கு தேவையான உரங்களை வழங்க நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பெரும்போகத்திற்கு தேவையான உரங்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று சனிக்கிழமை அனுராதபுரத்திற்கு விஜயம் செய்து வரலாற்று சிறப்பு மிக்க புனித தலங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

# நான்காவது கொவிட் தடுப்பூசியை விரைவாக செலுத்திக் கொள்ளுங்கள்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்து

**(கொழும்பு)**

**நான்காவது கொவிட் தடுப்பூசியை விரைவாக செலுத்திக் கொள்ளுமாறு பொதுமக்களை சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.**



இதேவேளை நாட்டில் குறைந்த எண்ணிக்கையிலான மக்களே நான்காவது தடுப்பூசி செலுத்தி கொண்டுள்ளதாகவும் மூன்றாவது தடுப்பூசியை செலுத்திக் கொள்ளாதவர்கள் தடுப்பூசியை செலுத்திக் கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் நான்காவது தடுப்பூசி செலுத்தி கொண்டவர்களுக்கு பக்க விளைவுகள் ஏதும் ஏற்பட்டதாக இதுவரை பதிவாகவில்லை என்பதோடு நாளாந்தம் 100 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர் எனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

# திருகோணமலையில் விபத்து 3 பெண்கள் பரிதாபமாக பலி



(திருமலை)

திருகோணமலை-மூதூர் பகுதியில் நேற்று உழவு இயந்திரமொன்று விபத்திற்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை-மட்டக்களப்பு பிரதான வீதியில் மூதூர் பாச்சனூர் 64 ஆவது கட்டைப் பகுதியில் அமைந்துள்ள கொட்டியாரம் ரஜமஹா விகாரையில் சிரமதான நிகழ்விற்காக சென்ற உழவு இயந்திரம் வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளானது.

விபத்தின் போது குறித்த உழவு இயந்திரத்தில் 21 பேர் பயணித்துள்ளதாகவும் அதில் 3 பெண்கள் உயிரிழந்துள்ளதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தோரின் சடலம் மூதூர் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

# விசேட தேவையுடையவர்களுக்கு புதிய வாக்குச்சீட்டு அறிமுகம்

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

விசேட தேவையுடையவர்கள் வீட்டிலிருந்தே வாக்களிக்கக்கூடிய வசதி எதிர்வரும் காலங்களில் ஏற்படுத்தி கொடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அதன் தலைவர் நிமல் புஞ்சிஹேவா மேற்கண்டவாறு தெரிவித்தார். விசேட தேவையுடையவர்களுக்கான புதிய வாக்குச் சீட்டு அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# கட்டுநாயக்கவில் புதிய முனையம் திறப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் பிரவேசிக்கும் அதிக வருமானம் ஈட்டும் விமான சேவைகளுக்காக 'ரன் மாவத்தை' என்ற பெயரில் புதிய சேவை முனையம் திறக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்தப் புதிய முனையத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

அதிக வருமானம் ஈட்டுபவர்கள் விமான நிலைய கடமைகளைச் செய்ய வரிசையில் நிற்காமல் இந்த ஓய்வறைக்கு வருகை தரலாம் மற்றும் அவர்களின் குடிவரவு மற்றும் சுங்க வரிகள், கேட்டரிங் மற்றும் தகவல் தொடர்பு தேவைகளை விரைவாக நிறைவேற்றலாம்.

அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்ட இதுபோன்ற விஐபி முனையம் ஒன்று உள்ளது.

புதிய முனையத்தில் பயணி ஒருவரிடம் இருந்து 200 அமெரிக்க டொலர் வசூலிக்கப்படும். (நி)


## பணியாளர் தேவை

எமது கல்வி நிறுவனம் கீழ்வரும் பணியாளர்களை எதிர்பார்க்கின்றது.

1. சிற்றுண்டிச்சாலை காசாளர்- பெண்
2. சிற்றுண்டிச்சாலை ஊழியர் - பெண்

24.08.2022 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நேர்முகத்தேர்விற்கு சமூகமளிக்கவும்.

021 221 6690, 077 336 4055

New Science World

(Navalar Road- Brown Road Junction, Jaffna.)

(C7763)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 35 ¾ செவ் 11 சூரி 4 இல்<br>உயரம்: 5'4"<br>தொழில்/தகமை: படவரைஞர் தொழிநுட்ப உதவியாளர் மின்சாரசபை<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/8917 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: செவ் 4 சூரி 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BBA, MPA பட்டதாரி தகவல் உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்<br>தொ.இ:G/7377 |
| பிறப்பு: 1990 NON RC<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 20 செவ் 6 சூரி 9 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L சொந்ததொழில் (கணனி திருத்துநர்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் இந்து. RC உம் ஏற்கப்படும்<br>தொ.இ: B/6044 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்-3<br>கி.பா: செவ் 9 சூரி 11 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: உயர்தரம்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/7478 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 20 செவ் 8 சூரி 9 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில் (பாதுகாப்பு உத்தியோகத்தர்)<br>எதிர்பார்ப்பு: A/L<br>தொ.இ: B/6080 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 31 ½ செவ் 3 சூரி 5 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: (BSc) விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: தகுதிக்கேற்ப வரன்<br>தொ.இ:G/7480 |
| பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 23 ¼ செவ் 4 சூரி 2 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:O/L சொந்தத்தொழில் (மோட்டார் வாகன திருத்துநர்)<br>தொ.இ: B/6097 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 25 ¾ செவ் 7 சூரி 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: D.O (DS Office)<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ:G/7507 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம் ஆவணப்பெட்டகம் நூல் வெளியீடு




செஞ்சொற் செல்வர். கலாநிதி ஆறு.திருமுருகனால் தொகுக்கப்பட்ட 'திருக்கேதீச்சரம் ஆவணப் பெட்டகம்' நூல் வெளியீட்டு விழா நேற்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் தலைமையில். நடைபெற்றது.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன சுவாமிகள், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். நூலாசிரியர் உரையை கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கினார். (4-18)

# அதிக விலைக்கு முட்டை

## விற்போருக்கு எதிராக நடவடிக்கை

### பாவனையாளர் அதிகார சபை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் கூடிய விலைக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாவனையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி அறிவித்துள்ளார்.**



முட்டைக்கான நிர்ணய விலையினை பாவனையாளர்கள் அதிகார சபை விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிட்டுள்ளது.


வெள்ளை நிற முட்டை 43 ரூபாவும் பழுப்பு நிற முட்டை 45 ரூபாவுக்கும் விற்பனை செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே விற்பனையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள், அதி கூடிய விலைக்கு முட்டையினை விற்பனை செய்தல், விலைப் பட்டிகளை காட்சிப்படுத்தாமை போன்றவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது இது தொடர்பில் யாழ். மாவட்ட வர்த்தகர்களுக்கு, பாவனையாளர்கள் அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகள் ஊடாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது என மேலும் தெரிவித்தார். (4-33-104)

# நெல் உலர்த்தும் இடமாக மாறிவரும் கிளிநொச்சி பேருந்து நிலைய வளாகம்

(முறிகண்டி)




நெல் உலர்த்தும் இடமாக கிளிநொச்சி பேருந்து நிலையம் மாறி வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு இன்று வரை உரிய முறையில் பேருந்து நிலையம் முழுமையாக அமைத்து கொடுக்கப்படவில்லை.

தற்பொழுது குறித்த பேருந்து நிலையத்தின் அபிவிருத்தி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், நெல்லை பதப்படுத்துவதற்கு பயன்படுத்தும் பகுதியாக பயன் படுத்தப்படுகின்றது. 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் புதிதாக பேருந்து நிலையம் அமைத்த கொடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் பேருந்து நிலையமானது சுமார் 5 ஆண்டுகளிற்கு மேலாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றபோதிலும், முழுமை பெறவில்லை. இந்த நிலையில் போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல மில்லியன் செலவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப்பணிகள் மக்களிடம் முழுமையாக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறில்லையேல், இவ்வாறு மாற்று பயன்பாட்டுக்காக இவை பயன்படுத்தப்படும் நிலையே உருவாகும்.

இந்த வருடத்தின் இறுதி மாதங்களில் பருவ மழை பெய்ய ஆரம்பிக்கும். அவ்வாறான நிலையில் மக்கள் போக்குவரத்தினை சிரமமின்றி பெற்றுக் கொள்வதற்கு ஏற்ப குறித்த பேருந்து நிலையத்தை முழுமையாக்கி மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-100)



வரலாற்று சிறப்பு மிக்க நல்லையம்பதி அலங்கார கந்தசுவாமி தேவஸ்தானத்தின் மகோற்சவத்தின் சூர்யோற்சவம் நேற்று காலை இடம் பெற்றது.

(படம் - கஜிந்தன்)



சிரேஷ்ட சட்டத்தரணி வி.தேவசேனாதிபதியின் நிதிப்பங்களிப்புடன் சா/த மாணவர்களுக்கான கருத்தமர்வு கடந்த 16 ஆம் திகதி மாங்குளம் மாகாண தொழில்நுட்ப பயிற்சி கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

## சா/த-2021 (2022) இல் தோற்றிய

# கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் க.பொ.த.(சா/த)-2021 (2022) இல் தோற்றிய மாணவர்கள் அனைவரும் நாளை திங்கட்கிழமை வழமையான பாடசாலை நேரத்திற்கு பூரண சீருடையுடன் கல்லூரிக்கு சமூகம் தந்து, காலைப் பிரார்த்தனையின் பின்னர் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடுமாறு பாடசாலை அதிபர் எம். ஞானசம்பந்தன் அறிவித்துள்ளார். (4)



ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளருக்கும் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

(படம்-சிவசாந்தன், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.
- சுபாஷ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அசாதாரண சூழ்நிலைகள் நிரந்தரமாகும் போது...

2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நாடு முடக்கப்படுகின்ற ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது.

இந்த நிலைமை ஓர் ஆண்டைக் கடந்த நிலையில், நாடு வழமைக்குத் திரும்பியாக வேண்டும். இதற்காக கொரோனாத் தொற்றுடன் வாழப் பழகுதல் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

எனினும் காலப் பிழை விடுவதாக இல்லை. நம் இலங்கைத் திருநாடு மிகப் பெரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டது.

அனைத்துப் பொருட்களின் விலைகளும் பன்மடங்காயின.

தவிர, எரிபொருள் தட்டுப்பாடு மக்களின் இயல்பு வாழ்க்கையை மிக மோசமாகப் பாதித்தது.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை வர்த்தகர்கள் தாமே தீர்மானித்தனர்.

இதற்கு மேலாக, எரிபொருள் விடயத்தில் மாபியாக்கள் உருவாகினர்.

இவைகாரணமாக பாடசாலைகளை இயக்க முடியாத சூழ்நிலையும் அரச நிறுவனங்கள் இயங்கமுடியாத நிலைமையும் ஏற்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட மக்கள் புரட்சி ஆட்சியதிகாரத்தைப் புரட்டிப் போட்டது.

இந்தநிலையில் அரச நிறுவனங்கள் இயங்கினால் என்ன இயங்காமல் விட்டாலென்ன என்ற கட்டம் வந்தபோது, அதனை அரச பணியாளர்கள் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டனர்.

இதில் அனைத்து அரச பணியாளர்களும் உள்வாங்கப்படமாட்டார்களாயினும் பெரும்பாலான அரச பணியாளர்கள் நாட்டு நிலைமையைச் சாட்டாக வைத்துத் தமது பணி நிலைகளைப் புறந்தள்ளியபோது,

அதனால் பொதுமக்கள் மிகப்பெரும் கஷ்டங்களையும் அசௌகரியங்களையும் சந்திக்கலாயினர்.

சரி, அசாதாரண சூழ்நிலையில் இவை தவிர்க்க முடியாதவை என்று விட்டுவிடலாமென்றால், அதுதான் இல்லை. இலங்கை போன்ற வறிய நாடுகளில் அசாதாரண சூழ்நிலைகள் ஏற்படுத்தக்கூடிய மந்தநிலைகள் இயல்பாகி விடுகின்ற ஆபத்துக்கள் நிறையவே உண்டு.

அதாவது இயல்பு நிலைக்கு நாடு திரும்புகின்ற போதிலும் ஏலவே இருந்த அசாதாரண நிலைமையைச் சாட்டாகக் காட்டி, கடமைப் பொறுப்புக்களைச் செவ்வனே செய்யாமல் தவிர்க்கின்ற நிலைமை நீடிக்கலாம்.

இதனால் பொதுமக்கள் ஆற்றலைந்து அரச நிர்வாகத்தின் மீது நம்பிக்கையிழப்பர்.

எனவே அசாதாரண சூழ்நிலை காரணமாக வழங்கப்பட்ட நெகிழ்ச்சித்தனங்கள் நிரந்தரமாகாமல் இருப்பதை உறுதி செய்வது பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகளின் தலையாய கடமையாகும்.

# பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்பட முன்வாருங்கள்

## பஸிலின் அழைப்பை நிராகரித்தார் பீரிஸ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்து செயற்படுமாறு அதன் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ விடுத்த அழைப்பை பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நிராகரித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது எனப் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

இருப்பினும் பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் எதிர்த்தரப்பு வேட்பாளரான பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்கியிருந்தார்.

அத்துடன் ஜனாதிபதியால் அமுல்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்துக்கும் எதிராக அவர் வாக்களித்திருந்தார்.

இவ்வாறான காரணிகளால் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜி.எல் பீரிஸுக்குக் கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுக்குமாறும், கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து அவரை நீக்குமாறும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கையைத் தொடர்ந்து கட்சியின் முக்கிய பதவிகளை மறுசீரமைக்க கட்சியின் உயர்மட்டம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் ஒன்றிணைந்து செயற்படுமாறு பஸில் ராஜபக்ஷ, பேராசிரியர் ஜி.எல் பீரிஸுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அதனை ஜி.எல். பீரிஸ் நிராகரித்துள்ளார். அதேவேளை, தனது தரப்பினருடன் கலந்தாலோசித்து ஒரு தீர்மானத்தை அறிவிக்கவுள்ளார் என்றும் பஸில் ராஜபக்ஷவிடம் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# அரசாங்கம் நாடு நெல்லுக்கு ரூ.140 வழங்க வேண்டும்

## தனியார் அரிசி நிறுவனத் தலைவர்

(கொழும்பு)

அரசாங்கம் நெல் கொள்வனவு செய்யும் போது, நாடு நெல் கிலோகிராம் ஒன்றுக்கு 140 ரூபா வேனும் வழங்க வேண்டும் என தனியார் அரிசி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பதிலளித்த ரதன அரிசி நிறுவனத் தலைவர் மித்ரபால லங்கேஸ்வர, விவசாயிகள் கடந்த போகத்தில் உரத்துக்காக அதிக பணத்தை செலவிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போது அரசாங்கம் 120, 125, 130 ரூபா என்ற விலையில் நெல்லைக் கொள்வனவு செய்கிறது.

மத்திய அளவான அந்த விலை, விவசாயிகளுக்கு போதுமானதல்ல. 140, 150 ரூபா வழங்க வேண்டும் என்றே விவசாயிகள் கூறுவதை ஊடகங்கள் வாயிலாக அவதானிக்க முடிந்தது.

அவ்வாறு வழங்காவிட்டால், பெரும்போகத்தில் விவசாயிகள் எவ்வாறு பயிர்ச்செய்கையில் ஈடுபடுவார்கள் என்பது தெரியாது என்ற நிலையே உள்ளது.

எனவே, நெல்லுக்கான விலையை அரசாங்கம் அதிகரிக்க வேண்டும் என ரதன அரிசி நிறுவனத் தலைவர் மித்ரபால லங்கேஸ்வர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்காலத்தில் நெல்லுக்கு அதிக விலையை பெற்றுதருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தார். (ம-7)

## செப்டெம்பர் மாதம் வரை கோட்டா வருகை ஒத்திவைப்பு

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இம்மாத இறுதியில் நாடு திரும்புவார் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவரின் வருகை அடுத்த மாதம் (செப்டெம்பர்) வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் பின்னரே, கோட்டாவின் வருகை பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவின் வீடு அமைந்துள்ள மிரிஹான பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்குமாறு பொலிஸார் மற்றும் புலனாய்வு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகள் விசேட கண்காணிப்பில் வைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

### 2 வயதுக்கு குறைந்த

## குழந்தைகள் உள்ள தாய்மார் வெளிநாடு செல்ல அனுமதியில்லை

இரண்டு வயதுக்கு குறைந்த குழந்தைகள் உள்ள தாய்மார்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட மாட்டாது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அவ்வாறான பெண்கள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவை பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்காது என்றும் அந்த பணியகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவை பெற்றுக்கொள்ளும் போது தாய்மார்கள், தங்களுக்கு பிள்ளைகள் இருக்கின்றனர் அல்லது இல்லை என்பதையும் அல்லது இரண்டு வயதுக்கு மேற்பட்ட, 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகள் உள்ள தாய்மார்கள், அந்த பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் கல்வி தொடர்பில் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் சத்தியக்கடதாசி வழங்க வேண்டும்.

அந்த சத்தியக்கடதாசியானது,

தமது பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட வேண்டும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## மந்திகையில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் திருட்டு

(கரணவாய்)

மந்திகை சந்தைக்கு அருகாமையில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று ஓடு பிரித்து திருட்டு இடம் பெற்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு சென்ற வர்த்தகர் நேற்று சனிக்கிழமை காலை வர்த்தக நிலையத்தை திறந்த போதே திருட்டு இடம்பெற்றமை தெரிய வந்தது.

உள் நுழைந்த திருடர்கள் சிசிடிவி கேமராவை மறைப்பு செய்துவிட்டு அங்கிருந்த ரொக்கப் பணம், மற்றும் தொலைபேசிமீள் நிரப்பு அட்டை, சிகரெட் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய ரீதியில் கொரோனா பரவலில் சரிவு

## உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு

(ஜெனிவா)

**கொரோனா பரவல் கடந்த 3 ஆண்டுகளாக பொது மக்களை அச்சத்திற்குள்ளாக்கி வருகிறது. தற்போது இதன் தாக்கம் தடுப்பூசி போன்ற தடுப்பு நடவடிக்கைகளால் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருவதால் பொதுமக்கள் சகஜ நிலைக்கு திரும்பி விட்டனர்.**

கடந்த வாரம் 54 இலட்சம் பேரை கொரோனா தாக்கி உள்ளது. இது அதற்கு முந்தைய வாரத்தை விட 24 சதவீதம் குறைவு என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பாவில் கிட்டத்தட்ட 40 சதவீதமும் மத்திய கிழக்கு நாடுகளில் மூன்றில் ஒரு பங்கு குறைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இறப்புகளும் குறைய ஆரம்பித்து இருக்கிறது. ஆனாலும் ஆசியாவில் ஒரு சில பகுதிகளில் கொரோனா பரவலால் இறப்புகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது.

இது தொடர்பாக உலக சுகாதார நிறுவன தலைவர் டெட்ரோஸ் அதானோம் தெரிவிக்கையில்,

கொரோனாவுடன் வாழ வேண்டிய கட்டாய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். ஒரே வாரத்தில் உலகம் முழுவதும் 15 ஆயிரம் பேர் கொரோனாவால் இறந்து உள்ளனர்.

கொரோனா பரவல் குறைந்தாலும் கடந்த 4 வாரங்களில் இறப்பு விகிதம் 35 சதவீதம் அதிகரித்து இருக்கிறது. கொரோனா வைரஸ் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை.

இதனால் பொதுமக்கள் இதுவரை கடைபிடித்து வந்த முக கவசம் அணிதல், கைகளை சுத்தமாக வைத்து கொள்ளுதல், சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் போன்ற நடவடிக்கைகளை கைவிடக்கூடாது.

இதுவரை தடுப்பூசி போடாதவர்கள் உடனே அதனை போட்டுக்கொள்வது நல்லது.



2 தவணை தடுப்பூசி செலுத்தியவர்கள் பூஸ்டர் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். இது நம்மை மட்டுமல்ல சுற்றி உள்ளவர்களையும் பாதுகாக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (நி)

# ரஷ்ய ஆயுத கிடங்கு வெடிப்பு



(மொஸ்கோ)

உக்ரைனில் நிலை கொண்டுள்ள ரஷ்ய இராணுவத்திற்கு தேவையான ஆயுதங்கள் நிரப்பப்பட்டிருந்த கிடங்கு ஒன்று வெடித்து தீப்பற்றி எரிந்துள்ளதாகவும் இதனால் ஆயுத கிடங்கிற்கு அருகில் உள்ள இரண்டு கிராமங்களில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஆயுதக் கிடங்கு உக்ரைனின் அணுமின் நிலையம் அமைந்துள்ள 'ஐபோரிஜியா' என்னும் இடத்திற்கு அருகில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அணுமின் நிலையத்தை குறி வைத்து ரஷ்யப் படைகள் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் இந்த தாக்குதல்களில் பொதுமக்கள் மூவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்துள்ளன.

மேற்படி ஆயுத கிடங்கு வெடிப்பினால் ரஷ்யாவிற்கு ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல்கள் இன்னமும் வெளியாகவில்லை. (நி)

# லத்தீன் அமெரிக்காவில் உணவுப் பஞ்சம்


## தடுக்குமாறு உலக உணவுப் பிரிவுக்கு ஐ.நா. அறிவுறுத்து

(லத்தீன் அமெரிக்கா)

லத்தீன் அமெரிக்காவில் உணவுப் பஞ்சம் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் இதனை தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கொரோனாவின் தாக்கம் தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையிலும் மற்றும் ரஷ்ய உக்ரைன் போர்ச்சூழல் உணவு போக்குவரத்தை முற்றிலும் தடை செய்துள்ள காரணத்தினாலும் லத்தீன் அமெரிக்காவின் பல மாநிலங்களில் மக்கள் உணவிற்கு போராடும் நிலை உருவாகி வருவதாகவும் இந்நிலைமையை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து இல்லாமல் செய்வதற்கு ஏற்ற வகையில் உணவுப்பரிமாற்றங்களை விரைந்து மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்குமாறு உலக உணவுப் பிரிவிற்கு ஐ.நா. அறிவுறுத்தியுள்ளது. (நி)

# உலகில் உயரமான ரயில் பாலம் ஜம்மு காஷ்மீரில் திறந்து வைப்பு



(டில்லி)

உலகின் மிக உயரமானதாக கருதப்படும் செனாப் ரயில் பாலம் கடந்த 13 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

ஜம்முவின் ரியாசி மாவட்டத்தில் பக்கால் மற்றும் கவுரி என்ற இடத்துக்கு இடையே செனாப் ஆற்றின் குறுக்கே 1,178 அடி உயரத்தில் குறித்த ரயில் பால கட்டுமானப்பணி கடந்த 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த பாலத்தின் நீளம் 4,314 அடி.

இரும்பு மற்றும் கொங்கிரீட் பாலமாக இது அமைக்கப்பட்டுள்ளது. ரயில் பாலத்தில் அனைத்துப் பணிகளும் முடிவடைந்ததால் செனாப் ரயில்வே பாலம் திறந்து வைக்கப்பட்டது. (நி)

# இந்தியா, அமெரிக்கா கூட்டுப்போர்ப் பயிற்சி

(டில்லி)

இரு நாடுகளினதும் இராணுவ உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்தியாவும் அமெரிக்காவும் வழக்கமான 'யுதாபியஸ்' தொடர் போர்ப் பயிற்சிகளை உத்தரகாண்டில் உள்ள சீனா எல்லைக்கு அருகில் உள்ள அவுலி பகுதியில் நடத்தவுள்ளது.

பல மாதங்களுக்கு முன்பே திட்டமிடப்பட்ட இந்த பயிற்சியானது, இரு நாட்டுப் படைகளும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முறியடிப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கூடுதல் துருப்புக்கள் மற்றும் தளபாடங்கள் குவிக்கப்பட்ட பகுதியாக இந்த மலைப்பகுதி காணப்படுவதோடு அங்கு ஒக்டோபர் 18 முதல் 31 வரை பயிற்சி நடைபெறும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

தாய்வான் குறித்து அமெரிக்கா, சீனா இடையே பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியாவும் கடந்த 2020 ஆம் ஆண்டிலிருந்து சீனாவுடன் எல்லைப் பிரச்சினையால் மோதல் போக்கில் உள்ளது.

இந்நிலையில் 18 ஆவது தடவையாக நடைபெறும் இப்போர்ப் பயிற்சியானது, இருதரப்பிடையே இணைந்த செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு உதவும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை இரு படைகளும் இந்தியா அமெரிக்காவில் போர் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 420 | 350 | 450 | 450 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 450 | 450 |
| தக்காளி | 400 | 380 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 240 |
| கோவா | 450 | 480 | 450 | 450 |
| கரட் | 300 | 330 | 370 | 400 |
| பூசணி | 100 | 100 | 140 | 120 |
| புடோல் | 100 | 120 | 120 | 180 |
| வாழைக்காய் | 160 | 160 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 200-450 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 180 | 180 |
| பாகற்காய் | 350 | 400 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 180 | 150 | 140 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 260 | 300 |
| பீற்றூட் | 120 | 200 | 160 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 650 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 450 | 400 | 400 |
| போஞ்சி | 600 | 700 | 400 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | 300 | — | 400 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 280 | 320 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 140 | 240 |
| பொன்னாங்கண்ணி | 120 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 20 | 80 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில்...

விக்கப்படுகிறது. இதில் படுகாயங்களுக்குள்ளான இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடி பொலிஸார் மணல் கடத்திய வாகனத்தை கைப்பற்றியுள்ளனர். (ம-7.33.60.104)

## முதியவரின்...

ளாக காணாமற்போன முதியவரின் சடலம் என உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

தொண்டைமானாறு வல்லை வீதியைச் சேர்ந்த மயில்வாகனம் குருமூர்த்தி (வயது-75) கடந்த 17ஆம் திகதி புதன் கிழமை காணாமற்போயிருந்தார்.

சடலம் உருக்குலைந்து காண்ப்படுவதனால் அவர் அணிந்திருந்த ஆடைகளை வைத்து உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(ம-7.60.33.104)

## சபுகஸ்கந்தவை...

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தற்போது 100,000 மெட்ரிக் தொன் கச்சா எண்ணெய் இறக்கப்பட்டு வருவதாகவும், அடுத்த வாரம் மேலும் 120,000 மெட்ரிக் தொன்கள் வரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் விமான எரிபொருள் கையிருப்பு தரையிறக்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிடுகிறார். (ம-7)

## பாராளுமன்றை...

திறந்தவெளி அரங்கில் பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ம-7)

## ராஜபக்ஷவை...

களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் ஒன்றை வழங்கியிருந்தார். விசாரணைகளுக்குப் பின் ஊடகங்களிடம் பேசிய அவர், விசாரணையின் தன்மை குறித்து தமக்கு தெரிவிக்கப்படவில்லை என்றார்.

அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்து விசாரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது முயற்சித்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவே மக்கள் போராட்டங்களின் பலனைப் பெற்று நாட்டின் ஜனாதிபதியானார் என்றும் மேலும் தெரிவித்தார்.

"ரணில் ராஜபக்ஷ" ராஜபக்ஷவை விட சர்வாதிகாரி என்றும் ஹிருணிகா மேலும் கூறினார். (ம-7)

## சஜித்தின்...

வாக்குமூலம் வழங்கிய பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள துலாஞ்சலி பிரேமதாஸ,

"தற்போதைய ஜனாதிபதியின் வீடு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் வழங்க வருமாறு அழைத்தனர்.

நான் வந்து வாக்குமூலம் வழங்கினேன். சம்பவம் நடந்த போது நான் அங்கு ஓரிடத்தில் இருந்தேன்.

விசாரணை அதிகாரிகள் நட்புறவாக உரையாடினர். உண்மையைக் கூறினால் எந்த பிரச்சினைகளும் இருக்காது. எனக்கும் எந்த பிரச்சினையுமில்லை என்றார். (ம-7)

## ஜனாதிபதிக்கு...

நேற்று முற்பகல் வரலாற்று சிறப்புமிக்க அநுராதபுர ருவன்வெலி மஹா சாய விகாரைக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிகளைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி அவர்கள், விஹாராதிபதி தேரரை நேரில் சென்று சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உபதேசம் வழங்கிய தேரர், நாடு சகல அம்சங்களிலும் அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ள வேளையில் ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

நாட்டிற்காக ஜனாதிபதி அவர்கள் எடுக்கும் அனைத்து சரியான தீர்மானங்களுக்கும் மகா சங்கத்தினரின் ஆசீர்வாதம் கிடைக்கும் எனவும், அந்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய திறமையான மற்றும் சரியான குழுக்களைத் தெரிவு செய்து, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக அவர்களை ஒரே இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும் பொறுப்பு ஜனாதிபதிக்கு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய தொலைநோக்குப் பார்வையும் வேலைத்திட்டமும் கொண்ட ஜனாதிபதி அவர்களுக்கு, நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை வெற்றிகொள்ளும் பலம் இருப்பதாக, தேரரின் அனுசாசன உரையில் குறிப்பிட்டார்.

நாட்டைப் பொருளாதார ரீதியில் மீட்டெடுக்கும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது அனைவரினதும் பொறுப்பாகும் எனவும், [illegible] பகைத்துக்கொ[illegible] தலை[illegible] சரிசெய்து பலமான இராஜதந்திர உறவுகளை கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும், அரச சேவையை அமுல்படுத்துவதில் குறைவாகப் பேசக்கூடிய, அதிகம் உழைக்கக்கூடிய அதிகாரிகள் குழுவொன்றை தமது அருகில் இணைத்துக்கொள்வதன் முக்கியத்துவம் குறித்தும் ஜனாதிபதி அவர்களிடம் தேரர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அங்கு விசேட அனுசாசன உரை நிகழ்த்திய தேரர், நாடு எதிர்நோக்கும் சவால்களை அச்சமின்றி ஏற்றுக்கொண்டு நாட்டை சரியான பாதைக்கு இட்டுச் செல்லும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க அனைத்துத் தரப்பினரும் முழு மனதுடன் ஒன்றிணைய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கட்சி, நிறம், சாதி, மத வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளக் கூடாது என்றும், மனச்சாட்சிப்படி இது அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ள தேசியப் பொறுப்பு என்றும் தேரர் வலியுறுத்தினார். (ம-7)

## இனப் படுகொலை...

வர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை அழைத்து இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தன்நடராஜா இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத்தெரிவிக்கையில்,

ஜெனிவா கூட்ட தொடருக்கு முன்பாக அனைவரினதும்ஏகோபித்த கருத்தாக ஜெனிவா கூட்டு நாடுகளுக்கு அனுப்புவதற்கு மகஜரில் கையொப்பமிட்டு அனுப்புவதற்காக இந்த கூட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தோம்.

கடந்த வருடம் ஜனவரி15 ஆம்திகதி அனைவரும் ஒற்றுமையாக ஒரு குரலில் கோரிக்கைகளை முன்வைத்தது போல் இந்த தடவையும் இதை செய்வதற்கு நாம் முன்னெடுத்திருக்கின்றோம். அதில் ஓரளவு வெற்றிபெற்றிருக்கின்றோம்.

இதற்கு ஆதரவாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆதரவை தெரிவித்திருக்கின்றது. நாங்கள் எழுதிய மகஜருக்கு ஆதரவாக, தமிழ்த்தேசிய மக்கள் முன்னனியும் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஏனைய கட்சிகளும் வெளிபடையாக கூறாவிட்டாலும் அவர்கள் ஏற்றுக்கொண்டதாக தான் வந்த பிரதிநிதிகள் கூறியிருக்கிக்கின்றார்கள். அதை தமது தலைமை பீடங்களுடன் கதைத்து தான் தமது இறுதிமுடிவை [illegible] [illegible](ம-7.299)

## போராட்டங்களை...

செய்த ராஜபகஷர் களை சந்தோசப்படுத்தும் செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகிறார். இதன் ஒரு கட்டமே யூனியன் பிளேஸ் பகுதியில் வைத்து அனைத்து பல்கலைக்கழக மாணவர்களின் அமைதிப் பேரணியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகும் என்று அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

எனினும் தமது பேரணி மீது ரணில் தாக்குதல்களை நடத்தினால். தமது பேரணி நுகேகொடையில் நிறுத்தப்படமாட்டாது. பேரணி விரிவுபடுத்தப்படும் என்று திசாநாயக்க எச்சரிக்கை விடுத்தார். (ம-7)

## சிங்கள மக்களை...

பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், சின்னத்தம்பி சிவமகாராசாவின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் தின நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை யாழ். தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி நினைவேந்தல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம-7.18)

மஹஜன சம்பத
திகதி 2022/08/20
சீட்டிழுப்பு இலக்கம் 4853
A 3 0 2 9 4 6
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.20
சீட்டிழுப்பு இலக்கம் 162
மகரம் 32 33 59 61 மகரம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1201
Y 13 11 14 34 65

கொவிசெத
திகதி 2022.08.20
சீட்டிழுப்பு இலக்கம் 3095
M 03 13 37 40
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.08.20
சீட்டிழுப்பு இலக்கம் - 883
T 11 31 37 49

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1654
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2022.08.20
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,196,920/-
32 42 58 70 V

சனிதா Shanida
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.20
சீட்டிழுப்பு இல : 3989
வர்ணம் : பச்சை
ரூ. 2,839,940/-
13 53 54 66 P

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,294,700.60
திகதி 2022-08-20
வெற்றி வாரம் 3540
07 37 41 55
வர்ணம் இள நீலம்
ரூ. 7,600,420/-

N 36 34 49 52 69
சீட்டிழுப்பு வாரம் 1004
சிவப்பு
2022.08.20 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 254,923,111/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

சம்பத வாசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 520
திகதி 2022-08-20
வர்ணம் சிவப்பு
K 27 37 55 06
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,004,176/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1828
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.08.20
தினம் சனிக்கிழமை
M 17 25 28 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,134,620/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு தங்கத்துடன் ஒருவர் கைது

புதையல் அகழ்வில் தோண்டி எடுக்கப்பட்ட தங்கம் எனக் கூறி விற்பனை செய்ய முயன்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோரக்களப்புகுளத்திற்கருகில் தகவல் ஒன்றிற்கு அமைய சம்பவதினமான வெள்ளிக்கிழமை மாலை கல்முனை விசேட அதிரடிப் படையினரால் இக் கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

24 வயதுடைய கோமாரி பகுதியை சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ரூபா 20 இலட்சம் பெறுமதியான 350 துண்டுகள் அடங்கிய 113 கிராம் 180 மில்லி கிராம் எடையுடைய ஒரு தொகுதி கறுப்பு பொன்நிற கற்கள் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளது.(ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டுப்பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு (12511)

077 512 2931

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வெற்றுக்காணி 1 1/2 காணி விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (12510)

077 781 6547
076 707 8049

## தரம் 6, 7, 8, 9, 10 O/L & A/L தமிழ்

(Personal And Group Classes)

தனியாகவும், குழுவாகவும் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

அழையுங்கள் (12485)

070 605 8595

## வேலைக்கு ஆட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் புடைவை கடை ஒன்றிற்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவை. பழகியவர்கள்/ பழக விரும்புவர்கள் விரும்பத்தக்கது. (12505)

076 632 3554

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை, புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கு அருகில் 4 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (12510)

077 781 6547
076 707 8049

## புதிய பிரிவுகள் ஆரம்பம் 27.08.2022

வங்கியியல் கற்கைநெறிகள்

**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L 6 Passes with 5 Credits including Maths.

கணக்காளர் கற்கைநெறிகள்

**Chartered Accounting Courses**
Business level - 1, II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes.

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு

**aat (Sri Lanka)**
**AA1, AA2, AA3)**
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English

G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்

**Certificate Course in English**
20 Batches have successfully Completed the Course

Further Details: **Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382, 021 222 9149
077 440 5917 (C-4762)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நாகர் விகாரை அருகில் 5 1/2 வெற்றுக்காணி விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (12510)

077 781 6547
076 707 8049

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் கட்டுமான, இயந்திர உபகரண விற்பனை நிலையத்திற்கு

- விற்பனையாளர்
- கணக்காளர்

தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (12508)

076 000 4903

## பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன

- பொதி செய்பவர்
- பாதுகாவலர்
- உதவியாளர்கள்

யாழ். நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன. வயதெல்லை (21 -40) இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
வ.வ.இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்
இல.58, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல. - 021 222 4766
(திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை தொடர்பு கொள்ள முடியும்) (12499)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (12136)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

## காணி விற்பனைக்கு

58/1, பழம் வீதி, சுந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பலாலி வீதி, திருநெல்வேலி கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம் வீதியில் சுமார் 200 m தூரம் அளவில்) (C-4766)

தொலைபேசி:
077 977 3732

## தவறிவிட்டது

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சு.கிதர்சன் (900xxxx01V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, அலுவலக அடையாள அட்டை மற்றும் வங்கி அட்டை(ATM) என்பன சாவகச்சேரிக்கும் யாழ். நகருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-4767)

076 885 3866, 077 323 3999

## காணி விற்பனைக்கு


யாழ். நாவற்குழி சந்தியில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம். (12482)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 11 05 1941

மறைவு 22 07 2022

அமரர் **ஆழ்வார் செல்லத்துரை**

(இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.08.2022) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வராத்துப்பளை,
புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை.

குடும்பத்தினர்


## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

## Water Proofing

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தின் அசல் கட்டட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

உலகத்தரம்மிக்கது வட மாகாணத்தில் முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள் (C-12512)

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

North and East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.